Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆனி- 30 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-ஆகிர் 06 (14.07.2005) வியாழக்கிழமை இதழ்:287

மங்கள நிகழ்வுகளுக்கு மங்களகரமான ஸ்தாபனம்

முற்றிலும் நவீனமயப்படுத்தி, குளிரூட்டப்பட்ட காட்சியறை



குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை,
கிளிநொச்சி.

## திருகோணமலையில் தமிழ் இளைஞர் கைது!

திருகோணமலை —

திருகோணமலையில் படையினர் மீது கிரனேட் வீசியதாக குற்றம்சாட்டி தமிழ் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் திருமலை - கண்டிவீதியில் டவுன் ரவுன் ஹொட்டேல் அருகே இருந்த இராணுவத்தினர் மீது கிரனேட் வீசியதாக இந்த இளைஞர் கைதுசெய்யப்பட்டார். திருமலை - சி.வி.வீதியைச் சேர்ந்த தியாகராஜா விஜயகுமார் (வயது29) என்ற இளைஞரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவராவார்.

## திருகோணமலையில்

# வெவ்வேறு தாக்குதல்களில் பதினைந்து படையினர் காயம்!

திருகோணமலை —

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று ஆங்காங்கே இடம்பெற்ற கைக்குண்டுவீச்சுச் சம்பவத்தில் 15 படையினர் படுகாயமடைந்தனர்.

மூதூர் - பெரியபாலம் என்ற இடத்தில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் நலன்புரி நிலையம் அருகே காவலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது இனந்தெரியாத குழுவினர் கைக்குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியதில் மூன்று படையினர் காயமடைந்த நிலையில் திருகோணமலை பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் குழந்தை ஒன்றும் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை - திருகோணமலை காந்தி நகரில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி இரு இராணுவச் சிப்பாய்கள் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர் ஒருவர் புத்தளத்தில் சுட்டுக்கொலை!

கொழும்பு —

புத்தளத்தில் நேற்று தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மதுரங்குளிப் பகுதியில இருந்தே, துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் அந்த இளைஞரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. வீதியோரத்தில் - கால்வாய் ஒன்றுக்குள் காணப்பட்ட இவரது சடலம், வேறொரு இடத்தில் சுட்டுக்கொன்ற பின்னர் கொண்டுவந்து போடப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தின் அருகில் தேசிய அடையாள அட்டை ஒன்றும், சாரதி அனு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு அரசியல்பணி போராளிகளின் நடவடிக்கை ஒழுங்குகளில் மாற்றம்!

கிளிநொச்சி —

அரச படையினர் யுத்தநிறுத்த உடன்பாட்டை மதித்து நடக்காததால் போராளிகளின் பாதுகாப்புக் கருதி -

கிழக்கில் அரசியல் பணிகளில் ஈடுபட்டிருக்கும் போராளிகளின் நடவடிக்கை ஒழுங்குமுறையில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக - மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்தார்.

கிழக்கில் அரசியல் பணியில் ஈடுபட்டிருக்கும் போராளிகளின் மீதான தாக்குதல் தொடர்ந்து இடம்பெறுவதாலும் - இதனைத் தடுக்க அரசிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு உரிய பதில் வழங்கப்படாததாலும் -

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து போராளிகளை மீளத்திருப்பியழைக்க புலிகள் முடிவுசெய்துள்ளனரா என்பது குறித்து பி.பி.சியின் தமிழோசைக்கு பேட்டியளித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் - முஸ்லிம் பிணக்குகளை தீர்ப்பதற்கான கட்டமைப்பை உருவாக்குவதற்கு இணக்கம்!



## கட்டளை தளபதிகளை சந்திக்க போராளிகள் தளம் திரும்பினர்!

மட்டக்களப்பு —


கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து அரசியல் பணிகளில் ஈடுபட்ட போராளிகள் கட்டளைத் தளபதிகளுடனான சந்திப்புக்கே அழைக்கப்பட்டதாகவும் -

இவர்களைத் திருப்பி அனுப்பும் உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து போராளிகள் திருப்பி அழைக்கப்பட்டதாக வெளியான செய்திகுறித்து கருத்து வெளியிட்ட மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு இந்தத் தகவலை உறுதி செய்தார்.

மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக - மட்டக் பதில் வழங்கப்படாததாலும் - வது - (12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் - முஸ்லிம் பிணக்குகளை தீர்ப்பதற்கான கட்டமைப்பை உருவாக்குவதற்கு இணக்கம்!





மட்டக்களப்பு —

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஏற்படுகின்ற பிணக்குகள் - பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காக - விடுதலைப் புலிகளையும், முஸ்லிம் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் கொக்கட்டிச் சோலையில் உள்ள விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது எடுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பிஸ்டல் குழுவினருக்குப் பயந்து ஆயுதக்குழுக்களின் முக்கியஸ்தர்கள் வவுனியாவிலிருந்து தலைமறைவு!

கொழும்பு —

விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவைச் சேர்ந்த 22 பேர் வவுனியாவுக்கு ஊடுருவியிருப்பதாக தகவல்கள் வெளியாகியதையடுத்து, படையினரின் பாதுகாப்புடன் விடுதலைப் புலிகளுக்கெதிராகச் செயற்பட்டுவந்த புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் ஆணி) போன்ற கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் வவுனியாவிலிருந்து கொழும்புக்கு தப்பிச் சென்றுள்ளதாகவே தகவல்கள் தெிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளுக்கெதிராகச் செயற்படும் இவர்களுக்கெதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலேயே முல்லைத்தீவிலிருந்து பிஸ்ரல் குழுவினர் வவுனியா வந்துள்ளதாக அரச புலனாய்வுத்துறைக்குத் தகவல் கிடைத்ததையடுத்து படையினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கட்டளை தளபதிகளை சந்திக்க போராளிகள் தளம் திரும்பினர்!

மட்டக்களப்பு —

கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து அரசியல் பணிகளில் ஈடுபட்ட போராளிகள் கட்டளைத் தளபதிகளுடனான சந்திப்புக்கே அழைக்கப்பட்டதாகவும் -

இவர்களைத் திருப்பி அனுப்பும் உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து போராளிகள் திருப்பி அழைக்கப்பட்டதாக வெளியான செய்திகுறித்து கருத்து வெளியிட்ட மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு இந்தத் தகவலை உறுதி செய்தார்.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்திலிருந்தும் இது போன்ற சந்திப்புக்காகவே போராளிகள் திருப்பிஅழைக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அரசியலமைப்புக்கு விரோதமாக பீற்றர் ஹரோல்ட் நடக்கக்கூடாது!

## விமல் வீரவன்ச எச்சரிக்கை



கொழும்பு —

இலங்கையின் அரசியலமைப் புக்கு விரோதமான வகையில் உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் நடந்துகொள்ளக்கூடாது என்று ஜே.வி.பி எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல்வீரவன்ச இதனைத் தெரிவித்திருந்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்;-

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணையின்போது உலகவங்கியின் வதிவிடப்பிரதிநிதி கடிதம் ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

அதில் பொதுக்கட்டமைப்புக்கான நிதியை உலகவங்கியே கையாளும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் - அந்த நிதிக் கையாள்கையின் அங்கீகாரத்தை இலங்கையின் அமைச்சரவை கொண்டிருக்கும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் நிதிக்கையாள்கையின் உரிமையை நாடாளுமன்றமே கொண்டிருக்கிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## சான்றிதழ் வழங்கல்

தொலைக்கல்வி மூலம் பயிற்சி நெறிமுடித்து இதுவரை காலமும் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.கல்வி வலயத்திற்கு வருகை தருமாறு தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைச் செயலாளர் க.பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார். சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத ஆசிரியர்கள் வருகைதரும் போது தொலைக் கல்வி இறுதிப் பரீட்சை முடிவு படிவத்துடன் இணைக்கப்பட்ட புகைப்படத்தையும் தவறாது எடுத்துவரவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.


## காணவில்லை



வத்திராயன் வடக்கு, தாளையடியை சேர்ந்த மயில்வாகனம் - ரகுவர்மன் என்பவர் பருத்தித்துறை ஆத்தியடியில் தங்கியிருந்தவேளை கடந்த 05 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார்.
இவர் பற்றி தகவல் அறிந்தவர்கள் - 077 9058433 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது சி.மயில்வாகனம் வத்திராயன் வடக்கு தாளையடி என்ற முகவரியுடன் தொடர்ப்பு கொள்ளவும்.

தகவல்:-சி.மயில்வாகனம்
C/4288 அஞ்சல் அதிபர் (பளை)

## சிறு விளம்பரம்

**ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P- 0779122836
நேரம்:காலை9.00 - 8.30 வரை.(1198)

**ராஜா** யாழ்ப்பாணம்

கடைசி வாரமாக
ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல் நடித்த



**சந்திரமுகி**

15-07-2005 முதல்
**கஜ்க கசடற**

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**நாகதஞ்ஜீ** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)



சத்தியராஜ், சுனிதாவர்மா
வடிவேல் நடித்த
**6.'2"**

வெகு விரைவில்
அக்சன் கிங் அர்ஜுன், சிநேகா நடித்த
**சின்னா**

காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

**மனோகரா** யாழ்ப்பாணம்

3 ஆவது ஜனத்திரள் வாரமாக
சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லி ஆகியோரின்
சிறந்த நடிப்பில்



**அந்நியன்**
**anniyan**
இசை:- ஹரிஸ் ஜெயராஜ்
இயக்கம்:-சங்கர்

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்

விஜயசாந்தி, சுஜாத்தா, லக்ஷ்மி
நடித்த
**ஆர்யா**



அடுத்த வெளியீடு
ஷாம் லைலா நடித்த
உள்ளம் கேட்குமே

காட்சிகள்:- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

**நிறைஞ்சலாஸ்** சங்கானை

அஜீத், தேவயாணி
நடித்த
**காதல் கோட்டை**

பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)


# CARITAS - HUDEC JAFFNA

# VACANCY

## Position Vacant:

### 1.Senior Manager in Construction

To work in full partnership with the caritas international program expatriate advisor in managing monitoring and evaluating projects.

**Base Station: Mulaitivu**

Qualification & Experience:
The post holder reports directly to the program manager ( Expatriate ) and the assistant director of caritas Hudec Jaffna. The post holder will undertaken the following activities.

1) Grade I Technical Officer / Civil Engineer with 15-20 years experience in the same field
2) Experience in project planning, implementation , Montoring and Evaluating.
3) Excellent skill in monitoring implementation of program activities.
4) Strong interpersonal and liaison skills.
5) Computer literacy in WinWord, Excel and e-mail software.
6) Age between 40-50 years
7) Good knowledge of written and spoken English and able to prepare monthly progress report.
8) Good team player
9) Represent caritas Hudec on the issue of shelter activities at district and divisional level coordination meeting with government NGO's, UN organizations and the private sector.
10) Regular visits to monitor progress of programme activities and regular reporting back to programme manager
11) Post based in Mulaitivu, with regular visits to Killinochchi and Jaffna.

### 2. Secretary

To work in full partnership with the caritas internationals program expatriate advisor in managing monitoring and evaluating staff personals. The post holder will undertaken the following activities.

**Base Station : Killinochchi**

Qualification & Experience
The post holder reports Directly to the project coordinator (Expatriate) and the Assistant director of caritas-Hudec-Jaffna.

1) should have Secretariat / administrative background.
2) Assist the management on all programmatic matterssuch as developing and maintaining a filling system, compilation of beneficiary data basis (livelihood, housing, micro-finance)
3) translate documents into tamil or English as required and provide printed copies & letter drafting.
4) Maintain address lists and contact number of numbers of national and international staff and other essential telephone numbers of organizations hotels and services useful for the programme.
5) Realize correspondence and reporting for the senior construction manager and letter drafting or contracts for the finance manager with external organizations, governments banks, suppliers beneficiary groups including the related e-mail
6) Good command in English (oral &written)
7) Computer literacy in MS office and e mail software.
8) Ability to work independently
9) Excellent analytical skills
10) good team player

### 3. Senior Manager in logistics

To work in full partnership with the caritas internationals program expatriate advisor in managing monitoring and evaluating logistic activities.

Base Station : Killinochchi

Qualification & Experience
The post holder report directly to the director and in his absence to the program coordinator (Expatriate or counter part). reporting is verbally & in written (English). The post holder will undertaken the following activities.

1) Have excellent knowledge in logistic field and at least 3 years experience in the same field .
2) Plan and manage all activities related to procurement and storage of materials & equipment as necessary for the program implementation out side the construction department
3) Assist the purchasing office in preparing tenders, document &receipt, of quotations as necessary.
4) Assist to give the presence of his staff on every logistics sectorand give monthly time report to the director & personal administrator.
5) Assist at the beginning of the month with the Budget controller to mark a provision expenses regarding logistic activities.
6) Have to submit monthly running chart sheets (pickups, Motor bikes, Tractor, Trucks) & explanatory about assets materials in word (including inventory).
7) Supervise all distribution of materials as per program implementation out side construction department.
8) Post based in Killinochchi, with regular visits to Mulaitvu and Jaffna

### 4. Livelihood Manager

To work in full partnership with the Caritas Internationals (CI) Livelihood Program Expatriate Advisor in designing, managing, monitoring and evaluating projects which assist individuals affected by the tsunami to restore their livelihoods.

Base Station : killinochchi

Qualification & Experience :

The post holder Report directly to the Overall Program Manager/ Coordinator. The post holder will undertaken the following activities.

1) Direct, Supervise and Manage project officers, project managers and animators/social workers in identifying projects through a participatory process which are inclusive of a diverse group of individuals, including vulnerable group.
2) Ensure a high level of program quality in livelihood project design, implementation, monitoring and evaluating.
3) Identify capacity building needs to team's project officers, project managers and animators/social workers and local partners.
4) Organize training and workshops to build and improve capacities of the above mentioned staff.
5) prepare accurate and timely reports to donors.
6) Share experiences, methodologies and lessons with CI Livelihood partner in other Diocese of Sri Lanka.
7) Represent Caritas - Hudec on the issue of livelihood and income generating activities at district and divisional level coordination meetings aith government, NGO's,Un organizations and the private sector.
8) Work with project officers to regularly monitor and evaluate livelihood programs (fisheries, agriculture, small enterprises)
9) Experience using word processors, spread sheets and email.
10) Fluency in Tamil and English.
11) Good Communication Skills.
12) Demonstrated knowledge in agriculture, fisheries, micro enterprises sector

### 5.Translator

To work in full partnership with the Caritas Internationals (CI) Livelihood Program Expatriate Advisor and the other staffs.

Base Station : Killinochchi

Qualification & Experience :

The post holder Report directly to the Overall Program Manager/ Coordinator. The post holder will undertaken the following activities.

1) Should have 2 years experience in interpreting/equivalent.
2) Good command in English (Oral & Written)
3) Good Communication skills & ideally will also do some Teaching in English.
4) Good team player.
5) Translate documents into Tamil or English as required.
6) Computer literacy Microsoft Word and Excel.
7) Post based in Killinochchi, with regular visits to Mulaitivu and Jaffna.

Caritas - Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.

Interested candidates are encouraged to apply by submitting
1) Their curriculum Vitae,
2) A letter of motivation, and
3) Two non related referees

Before 22 July 2005 at Caritas - Hudec, 14 Mathew's Road, Deogu Street, Jaffna.
Please make sure to include a telephone contact with your submission.

(1983)

# ஜனாதிபதி மாளிகையை அண்மித்த பகுதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம்!

## வர்த்தமானி மூலம் அறிவித்தல்

கொழும்பு

ஜனாதிபதி மாளிகையை அண்மித்த சுற்றுப்பகுதி அதி உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட வர்த்தமானியின் பிரகாரம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைமுறைக்கு வரவுள்ள இந்தப் புதிய நடைமுறையில் கடுமையான நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளதாகவும், எதிர்வரும் ஒரு வருடத்துக்கு இது நடைமுறையில் இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஜனாதிபதி மாளிகையின் வடக்கே இந்து சமுத்திரம், மேற்கே சைற்ரா வீதி, பொலிஸ் தலைமையகம், கிழக்கே லோட்டஸ் றோட் சந்தி கிழக்குப் பக்கமாக லோட்டஸ் றோட் மற்றும் தெற்கே நாடாளுமன்ற சுற்றுவட்டம் ஆகியவற்றுக்குட்பட்ட அரச மற்றும் தனியார் கட்டடங்கள், நிலங்கள், அசையும், அசையாச் சொத்துக்கள் இந்த உயர்பாதுகாப்பு வலய சட்டதிட்டங்களுக்குள் உள்ளடக்கப்படும்.

குறிப்பாக ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், பங்கு பரிவர்த்தனை நிலையம், இரத்தினக்கல் மற்றும் தங்கநகை ஆபரண அதிகாரசபை முதலீட்டு அதிகாரசபை, சிறிலங்கன் விமான நிலைய தலைமையகம் உள்ளிட்ட பல முக்கியமான மக்கள் தொடர்பு மையங்களைக் கொண்ட உலக வர்த்தக மையம், மத்தியவங்கி, இலங்கை வங்கி தலைமையகம், செலிங்கோ மற்றும் கலதாரி, ஹில்டன், கொழும்பு இன்ரகொன்றனன்றல் சொகுசு விடுதிகளின் பணியாட்கள், விருந்தினர் விடுதிகள் உள்ளிட்ட அனைத்து தரப்புக்களும் உள்ளடக்கப்படும்.

இந்த உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் உள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உரிமையாளர்கள் அல்லது தலைமையாளர்கள் தமது கட்டடங்களிலுள்ள தளபாடங்கள், பணியாட்கள் பற்றிய விபரங்களை அறிவிக்கவேண்டும் எனவும், மாற்றங்கள் 24 மணித்தியாலத்துக்குள் அறிவிக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தப் பகுதிக்குள் பொலிஸார் தேடுதல்களை நடத்தவோ, சந்தேகத்துக்குரியவர்களை கைதுசெய்யவோ அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முன் அனுமதி இன்றி இந்த உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் கனரக வாகனங்கள் உள்நுழைவதும் தடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் வாகனங்கள் நிறுத்தப்படுவதும் இந்த சட்ட திட்டங்களுக்கு உட்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

## இரு அகதிகள் படையினரால் கைது!

கொழும்பு

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய இரண்டு அகதிகளை தலை மன்னார் 7 ஆவது மண்பிட்டியில் இருந்து கடற்படையினர் கைது செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட இவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (01)

## பொதுக்கட்டமைப்பை ஆதரித்து மலையகத்தில் பேரணி

கொழும்பு

பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்தக்கோரியும், இனவாத செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மலையக இளைஞர் முன்னணி எதிர்வரும் 17 ஆம் திகதி பேரணியொன்றை நடத்தவுள்ளது.

ஹற்றன் நகரில் இந்தப் பேரணி நடைபெறவுள்ளது. அத்துடன், இது தொடர்பான சுவரொட்டி பிரசார நடவடிக்கைகளிலும் இந்த முன்னணியினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

## பள்ளத்தாக்கில் லொறி வீழ்ந்து, ஆறு பேர் பலி, 12 பேர் காயம்!

கொழும்பு

பதுளை மாவட்டம் - அப்புத்தளையில் லொறி ஒன்று பாதையை விட்டு விலகி பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் விழுந்ததில் ஆறுபேர் உயிரிழந்ததுடன், 12 பேர் படுகாயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

ராஜகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த சிலர் லொறியில் மரண வீடொன்றுக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். 12.30 மணியளவில் அப்புத்தளை பகுதியில் வந்து கொண்டிருந்த குறித்த லொறி பாதையை விட்டு விலகி சுமார் 700 அடி பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் வீழ்ந்தது.

இதன் காரணமாக மேற்படி லொறியில் பயணித்த ஆறுபேர் மரணமடைந்தனர். 12 பேர் காயமடைந்து அப்புத்தளை, பதுளை, தியத்தலாவ வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். படுகாயமடைந்த மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு பனிமூட்டம் இருந்ததால் - பாதை தெளிவாகத் தெரியவில்லை எனவும், இந்த விபத்துக்கு இதுவே காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்க்க யோசனை!

கொழும்பு

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கு கல்வி அமைச்சு யோசனைகளை முன்வைத்துள்ளது.

இதற்கமைய சிற்றூழியர் ஒருவரின் சம்பளம் 4 ஆயிரத்து 870 ரூபாவால் அதிகரிக்கப்படும், தரப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் சம்பளம் 6 ஆயிரத்து 630 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

இந்த முடிவு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்காக நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

நிறைவேற்று உத்தியோகத்தர் சங்கமும், பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களும் மேற்படி பிரேரணை குறித்து திருப்தி தெரிவித்ததுடன், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதைவிட கல்வி அமைச்சு எதிர்வரும் டிசெம்பர் மாதம் புதிய சம்பளத் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்வதற்கும் இணங்கியுள்ளது.

எனினும், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்க கூட்டுக்குழு இதனை நிராகரித்ததுடன், பல்கலைக்கழக ஊழியர் சங்க வேலைப் புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்த மாத இறுதிக்குள் அனைத்து பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனம்

கொழும்பு

அரச நிறுவனங்களில் தற்போது இணைக்கப்பட்டுள்ள அனைத்து பட்டதாரிகளுக்கும் இந்த மாதம் நிறைவடைவதற்கு முன்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படுமென பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகளின் பணிகளை நிரந்தரமாக்கும் நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும், நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படாவிடின் - இதனை விரைவாகச் செயற்படுத்த முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது இணைக்கப்பட்ட பட்டதாரிகள், அமைச்சு வெற்றிடங்களுக்கு நிரப்பப்பட்டு வருகின்றனர். ஏனைய அமைச்சுக்களிலும் பட்டதாரிகளை நிரந்தரமாக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கல்வியமைச்சின் பதவிகளுக்காக 25 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுவதாகவும், எந்தவொரு பட்டதாரிக்கும் அநீதி இழைக்கப்பட மாட்டாதெனவும், அரச தொழில்களில் இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகள் அனைவரது நியமனங்களும் நிரந்தரமாக்கப்படுமெனவும், எனவே, தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கவில்லையென எவரும் அச்சமடைய வேண்டியதில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## மாவோ கிளர்ச்சிவாதிகளுக்கு புலிகள் பயிற்சியளிக்கவில்லை

### பீகார் அரசு அறிவிப்பு

புதுடெல்கி

விடுதலைப் புலிகள் பீகாரின் எல்லையோரத்தில் வைத்து நேபாள மாவோ கிளர்ச்சிவாதிகளுக்கு பயிற்சி எதனையும் வழங்கவில்லையென பீகார் அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து பீகாரின் உயர் பொலிஸ் அதிகாரி தகவல் தருகையில் -

நேபாளத்தின் எல்லைப்பகுதியில் வைத்து மாவோ கிளர்ச்சிவாதிகள் பயிற்சிபெறுவது தொடர்பாக நாம் எவ்வித தகவலையும் இதுவரை பெறவில்லை.

அத்துடன் இந்தப் பயிற்சி பெறுவது தொடர்பாக பொலிஸார் எவ்வித தகவலையும் பெறவில்லையென ஆளுநர் பூட்டா சிங் கடந்த திங்கட்கிழமை பொலிஸார் மற்றும் புலனாய்வு அதிகாரிகள் மத்தியில் நடந்த கூட்டத்துக்குப் பின்னர் தெரிவித்தார்.

மாவோ கிளர்ச்சிவாதிகளுக்கு விடுதலைப் புலிகள் பயிற்சிகளை வழங்கிவருவதாக இந்திய புலனாய்வு அமைப்புகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.கவின் போராட்டம் மேலும் உத்வேகமடையும்!

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு

இந்த வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் கட்டாயமாக நடத்தப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தெவுந்துறையில் இருந்து 12 நாட்களாக நடத்தப்பட்ட மக்கள் சக்திப் பேரணி நேற்றுமுன்தினம் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தை வந்தடைந்ததும், அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க செவிசாய்க்காமை காரணமாகவே - தாம் அரசாங்கத்துக்கு எதிராகப் பேரணியை நடத்தவேண்டியேற்பட்டதாக, ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டில் இன்றுள்ள நிலையை மாற்றவேண்டுமாயின் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். இதன் மூலமே புதிய அரசாங்கம் ஒன்றை அமைத்து மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்தக் கோருவது மக்களின் உரிமை ஆனால், அதை மறுத்துள்ள ஜனாதிபதி - அந்த உரிமை தேர்தல் ஆணையாளருக்கும், நீதிமன்றத்துக்கும் இருப்பதாகக் கூறுகிறார்.

எனவே, இதனை ஆட்சேபித்தே ஐக்கிய தேசியக் கட்சி இந்தப் பேரணியை ஏற்பாடு செய்தது.

இந்தப் போராட்டம் இத்துடன் நிறைவடையவில்லை.



இன்று முதல் புதிய உத்வேகத்துடன் எமது போராட்டம் முன்னெடுக்கப்படும்.

அடுத்த தடவை தாம் கொழும்பில் கூடும்போது மக்களின் உரிமைகளை வெற்றிகொள்ளும் அடிப்படையிலேயே கூடவுள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டார்.

## வவுனியா மாவட்டத்துக்கு ஜப்பானிய அரசாங்கம் 88.5 ரூபா நிதி ஒதுக்கீடு

கொழும்பு

ஜப்பான் அரசாங்கம் பிணக்குகளைத் தடுக்கும் வகையில், வவுனியா மாவட்டத்துக்கு 88.5 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

இந்த நிதியளிப்பு ஜப்பான் அரசாங்க அமைப்பின் மிதிவெடிகளை அகற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளின் கீழ் வழங்கப்பட்டது.

மிதிவெடிகள் அகற்றப்பட்ட சுமார் 31 ஆயிரத்து 609 மீற்றர் பகுதியைக் கையளிக்கும் நிகழ்வு - நேற்று இடம்பெற்ற போதே இந்த நிதியளிப்பு மேற்கொள்ளப்பட்டது.

ஜப்பான் அரசசார்பற்ற அமைப்பின் மிதிவெடிகளை அகற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளின் கீழ், 2004 ஆம் ஆண்டு முதல் ஜப்பான் இலங்கைக்கு உதவிகளை வழங்கிவருகிறது.


இதற்கு டென்மார்க் நாட்டின் மிதிவெடி அகற்றும் குழு தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகிறது.


ஜப்பான் அரசாங்கம் வவுனியாவில் மாத்திரம் மிதிவெடிகளை அகற்றும் திட்டத்துக்காக மொத்தம் 1.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இதுவரை செலவிடப்பட்டுள்ளன.


இந்த நிகழ்வில் ஜப்பான் அரச சார்பற்ற அமைப்பின் தலைவர் இசிஜி இசில் மற்றும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.சண்முகம் ஆகியோர் பங்கேற்றனர்.

## இலங்கையுடனான முதல் நாள் ஆட்டம்

# மேற்கிந்திய அணி 6 விக்கெட் இழப்புக்கு 271 ஓட்டங்களைப் பெற்றுள்ளது!







கொழும்பு —

இலங்கை -மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் நேற்று கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந்திய தீவுகள் அணி நேற்றைய ஆட்டநேர இறுதியில் 6 விக்கெட்டுக்களை இழந்து 271 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியதீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி ஜோசப் மற்றும் மார்ஷல் ஆரம்பவீரர்களாக களமிறங்கினர். எனினும், அணி 14 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 14 ஓட்டங்களைப் பெற்ற மார்ஷல் எல்.பி.டபிள்யூ முறையில் வாஸின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இதன்பின் ஜோசப்புடன் - மோட்டன் இணைந்து நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தியபோதிலும், 28 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஜோசப் - விஜயக்கோனின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து மோட்டனுடன், டியோநரைன் இணைந்த போதும் மோட்டன் 43 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் முரளியின் சுழலில் வெளியேறினார். இதன்பின்னர் டியோநரைன் 12 ஓட்டங்களுடன் விஜயக்கோனின் பந்திலும், சிமித் 4 ஓட்டங்களுடன் மலிங்கவின் பந்திலும் ஆட்டமிழந்தனர்.

எனினும் அணித்தலைவர் சந்தர்போல் மற்றும் ராம்டீன் இருவரும் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இந்த நிலையில் அணி 192 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ராம்டீன் 56 ஓட்டங்களுடன் விஜயக் கோனின் பந்தில் போல்டானார்.

இதனையடுத்து சந்தர்போலுடன் பாங்ஸ் இணைந்தார். இவர்கள் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 69, 30 ஓட்டங்களை பெற்றுள்ளனர்.

பந்து வீச்சில் மலிங்க மற்றும் விஜயக்கோன் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், வாஸ் மற்றும் முரளி இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளனர்.

# அணி குறித்த கவலை லாராவுக்கு கிடையாது

## டரன் கங்கா குற்றச்சாட்டு



கொழும்பு —

மேற்கிந்தியதீவு அணியின் நட்சத்திர வீரரான பிறைன் லாறா மீது அவ்வப்போது குற்றச்சாட்டுகள் எழுந்தவண்ணம் உள்ளது.

தேவைப்பட்டால் அணியில் பங்கேற்று விளையாடுவது, இல்லையென்றால் ஒதுங்கிக் கொள்வது என்பதை வாடிக்கையாக அவர் கொண்டுள்ளார்.

தற்போது இலங்கையில் சுற்றுப்பயணம் செய்துள்ள மேற்கிந்திய தீவுகள் அணியிலும் அவர் பங்கேற்க மறுத்துவிட்டார். சம்பளப் பிரச்சினை காரணமாக அவரும் முன்னணி வீரர்கள் சிலரும் விளையாட மறுத்துவிட்டனர்.

இது தொடர்பாக மேற்கிந்திய வீரர் டரன் கங்கா கூறியதாவது -

லாறாவுக்கு மேற்கிந்திய அணியைப்பற்றி எந்தக்கவலையும் இல்லை. தன்னைப்பற்றியே அவர் நினைக்கக்கூடியவர். அவர் அணியின் வெற்றிக்காக விளையாடுவதில்லை. மற்ற வீரர்களையும் அவர் ஊக்கப்படுத்தமாட்டார். ஆதரவாகவும் இருக்கமாட்டார். அவருக்கும் மற்றவீரர்களுக்கும் சரியான உறவு கிடையாது எனத் தெரிவித்தார்.

மேற்கிந்திய முன்னாள் விக்கெட் காப்பாளர் ரிட்லி ஜேக்கப்- லாறா ஒரு சுயநலவாதி. அவருக்கு அணியைப் பற்றிய கவலை கிடையாது என்று முன்னர் கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நட்வெஸ்ட் கிண்ணத்தை அவுஸ்ரேலியா கைப்பற்றியது

லண்டன் —

அவுஸ்ரேலிய -இங்கிலாந்து அணிகளுக்கிடையில் லண்டன் ஓவல் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நட்வெஸ்ட் கிண்ணத்தொடரின் இறுதியாட்டத்தில் கில்கிறிஸ்டின் அபார சதத்தால் அவுஸ்ரேலிய அணி 8 விக்கெட்டுக்களால் இங்கிலாந்தைத் தோற்கடித்து தொடரைக் கைப்பற்றியது.




நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலியா களத்தடுப்பை தெரிவுசெய்ததால் இங்கிலாந்து துடுப்பெடுத்தாடியது. இதில் ட்ரெஸ்கொதிக் - ஸ்ரரஸ் ஜோடி



களமிறங்கியபோதும் பிரட்லீயின் வேகப்பந்துக்கு தாக்குப்பிடிக்கமுடியாமல் ட்ரெஸ்கொதிக் டக் அவுட்டா னார்.

இதன்பின் வந்த இங்கிலாந்து வீரர்கள் எவரும் சிறப்பாகச் செயற்படவில்லை. இதில் வோன் 15 ஓட்டங்களுடன் ரன் அவுட்டாக, ஸ்ரரஸ் 36, பிளின்ரொப் 5, கொலிங்வூட் 9, ஜோன்ஸ் ஒரு ஓட்டமென எடுத்து இங்கிலாந்து அணி 93 ஓட்டங்களுக்குள் 6 விக்கெட்டுக்களை இழந்து தள்ளாடியது.

எனினும், பீற்றர்சனுடன் மாற்று வீரராகக் களமிறங்கிய சோலங்கி ஜோடி ஏழாவது விக்கெட்டுக்காக 93 ஓட்டங்களைச் சேர்த்தது. இதில் பீற்றர்சன் 2 சிக்சர் 8 பவுண்டரிகள் அடங்கலாக 74 ஓட்டங்களை எடுத்து அவுட்டானார். இதன்பின் சோலங்கியுடன் இணைந்த கைல்ஸூம் கைகொடுக்க இங்கிலாந்து அணி 50 ஓவர் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 228 ஓட்டங்களை எடுத்தது. இதில் சோலங்கி 53, கைல்ஸ் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்து வீச்சில் ஜிலெஸ்பி 3, கூஸ்பரோவிச் 2, பிரட்லீ ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

இதனையடுத்து சுலபமான இலக்குடன் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணிக்கு ஹைடன் - கில்கிறிஸ்ட் ஜோடி சிறப்பான அடித்தளத்தை இட்டது. இந்த ஜோடி சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கையில் 31 ஓட்டங்கள் பெற்றிருந்த ஹைடன் அவுட்டானார்.

இதன்பின் பொண்டிங், கில்கிறிஸ்டுடன் இணைந்தார். இவர்கள் இருவரது ஆட்டத்திலும் அனல் பறந்தது. இதில் அணி 185 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 44 பந்துகளில் 43 ஓட்டங்களை பெற்றிருந்த பொண்டிங் அவுட்டானார்.


இதன்பின் மார்ட்டின் இணைந்து கொண்டார். இறுதியில் அவுஸ்ரேலிய அணி 34.5 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 229 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இதில் 101 பந்துகளில் 2 சிக்ஸர் 17 பவுண்டரிகள் அடங்கலாக 121 ஓட்டங்களை எடுத்து கில்கிறிஸ்டும், மார்ட்டின் 21 பந்துகளில் 24 ஓட்டங்களைப் பெற்றும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்து வீச்சில் டரன்கோ, கைல்ஸ் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இந்துப் போட்டியின் ஆட்டநாயகனாக கில்கிறிஸ்ட் தெரிவானார். அத்துடன் ட்ரெஸ்கொதிக்கின் விக்கெட்டை வீழ்த்தியதன்மூலம் ஒரு நாள் போட்டியில் பிரட்லீ தனது 200 ஆவது விக்கெட்டைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

# இன்னும் இரண்டு வருடங்களில் இந்திய அணியில் மாற்றங்கள்!

## பயிற்சியாளர் சப்பல் கூறுகிறார்



டெல்கி —

இன்னும் இரண்டு வருடங்களில் இந்திய அணியில் பாரியளவிலான மாற்றங்கள் வருமென, இந்திய அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பல் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

பெங்களூரில் நான் தங்கியுள்ளேன். எனக்கு இது புதிய இடம் புதிய கலாசாரம். இவை எல்லாமே எனக்குச் சவாலாக உள்ளது. கிரிக்கெட் தேசிய அக்கடமி பெங்களூரில் இருப்பதால் தான் நான் பெங்களூரில் தங்குவது என முடிவு எடுத்தேன். இந்த அக்கடமியில் தான் வருங்கால வீரர்கள் உருவாகி வருகின்றார்கள். அவர்களை நேரில் பார்த்து திறமைகளைக் கண்டறிய முடியும்.

இன்னும் 2 ஆண்டில் இந்திய கிரிக்கெட் அணியில பெரியளவில் மாற்றங்கள் வரலாம். சில பேருக்கு காயங்கள் ஏற்படுகின்றன. வீரர்கள் மாறலாம்.

அந்த நேரத்தில் இவர்களைக் கொண்டுதான் அந்த இடத்தைப் பூர்த்திசெய்யமுடியும். அப்போது இந்திய அணியே புதிய மாற்றத்தைப் பெற்றிருக்கும்.

வீரர்களைத் தேர்வுசெய்யும் விடயத்தில் நான் தலையிடாவிட்டாலும் தேர்வுக்குழுவிடம் சில ஆலோசனைகளைச் சொல்வேன்.

எந்தெந்த அடிப்படையில் வீரர்களைத் தேர்வு செய்தால் நன்றாக இருக்கும் என்று என் கருத்தைச் சொல்வேன். வீரர்களுக்கும் தேர்வுக்குழுவுக்கும் நல்ல உறவு இருக்க வேண்டும்.

சிரேஷ்ட வீரர்களின் திறமை சில நேரங்களில் மங்கிப்போவது உண்டு. இதற்கு மன அழுத்தம் தான் காரணமாக இருக்கும் அதைச் சரிப்படுத்திவிட்டால் மீண்டும் திறமையாக விளையாடமுடியும்.

அந்தப் பணியை நாங்கள் செய்வோம். எவ்வளவு பயிற்சி அளித்தும் மீண்டும் திறமை வராவிட்டால் அவர்கள் அணியில் நீடிப்பது கஷ்டமானது தான். என அவர் மேலும் தெரிவித்தார்.

## தாச்சிப்போட்டி

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் மாவட்ட விளையாட்டுத் துறையின் ஆதரவில் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சிப் போட்டியின் காலிறுதிப் போட்டியில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கொக்குவில் வராகி அணியை எதிர்த்து, இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

## பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில்

# தொண்டமானாறு வி.கழகம் தடகளப் போட்டியில் சம்பியன்

பருத்தித்துறை —

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் 2 ஆம், 3ஆம் இடங்களை முறையே சென் தோமஸ் விளையாட்டுக் கழகமும், தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகமும் பெற்றன.

இந்த விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான தடகளப் போட்டியில் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் அதிகூடிய புள்ளியைப் பெற்றுக் கொண்டது. இந்தப் போட்டியில் ஒற்றுமை விளையாட்டுக் கழக வீரர்கள் 100 மீற்றர் தடைதாண்டலில் யோகேந்திரதாஷ், லயந்தன் 2ஆம், 3ஆம் இடத்தையும் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் பீ.தினேஷ்குமார் 2ஆம் இடத்தையும், 400மீற்றர் ஓட்டத்தில் பு.தினேஷ்குமார் முதலாம் இடத்தையும், 2 ஆம், 3 ஆம் இடங்களை முறையே பு.டனுசியனும், பு.ராஜ்குமாரும், 800 மீற்றர் ஓட்டத்தில் 1, 2, 3 ஆம் இடங்களை முறையே றோ. யோகேந்திரதாஷ், ப.லயந்தன், பு.டனுசியனும், நீளம் பாய்தல் சு.சசிகுமார் 2 ஆம் இடத்தையும், உயரம் பாய்தல் யோகேந்திரதாஷ், டனுசியன் முறையே 1 ஆம், 2 ஆம் இடங்களையும், முப்பாய்ச்சலில் சசிக்குமார் 1 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இதே போட்டியில் 4X100 மீற்றர், 4X400 அஞ்சல் ஓட்டப் போட்டிகளிலும் இந்தக் கழகம் 1ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# முகாம்களில் தங்கியிருக்கும் மீனவருக்கு தற்காலிக வீடுகள்

## யு.என்.எச்.சி.ஆர் நிறுவன அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் யுத்த நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணியில் யு.என்.எச்.சி.ஆர் அமைப்பு ஈடுபட்டுள்ளதாக அந்த அமைப்பின் திட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கபட்ட பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலும், வடமராட்சி கிழக்கு பகுதியிலும் உள்ள மக்களுக்கு தற்காலிக வீடுகள் அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலும், வடமராட்சி கிழக்கு பகுதியில் பொற்பதி, குடத்தனை ஆகிய இடங்களிலும் இதுவரை 552 தற்காலிக வீடுகளும், 46 திருத்த வேலைகளும் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறே உயர்பாதுகாப்பு வலய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தோர் மற்றும் யுத்த நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள 347 பேருக்கு தற்காலிக வீடுகளும், 341 பேருக்கு திருத்த வேலைகளும் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு வீடுகளை இழந்த மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைக்கும் திட்டத்தின் போது, பயனாளிகளுக்கு நேரடியாகவே கட்டடப் பொருட்கள் வழங்கப்பட்டதாகவும், வேலைத்திட்டங்கள் மேற்கொள்ள முடியாதவர்களுக்கு தொழிலாளர்களை ஒழுங்கு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகள் மற்றும் இடம் பெயர்ந்த மக்கள் வசிக்கும் முகாம்களில் உள்ள மலசல கூடங்கள் யு.என்.எச்.சி.ஆர் அமைப்பால் புனரமைக்கப்படவுள்ளதாகவும், பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அதற்கான தகவல் திரட்டும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் திட்ட அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# அம்பன் வீதித்தடையில் இளைஞர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம் —

வடமராட்சி கிழக்கில் அம்பன் வீதித் தடைகளில் நிற்காமல் - உயர்பாதுகாப்பு வலயப் பகுதியான நாவற்காடு பிரதேசத்துக்குள் நுழைய முயன்ற நபர் ஒருவரைத் தாம் கைதுசெய்திருப்பதாக படையினர் தெரிவித்தனர்.

கனகரத்தினம் சுகந்தன் என்ற இளைஞரே மோட்டார் சைக்கிளில் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைந்த போது கைதுசெய்யப்பட்டதாகவும், பின்னர் இவர் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை காலை 11.20 மணியளவில் இடம்பெற்றது.

# சந்நிதியான் ஆசிரமம் நடத்தும் பேச்சுப்போட்டி

யாழ்ப்பாணம் —

தொண்டமானாறு செல்வச் சந்நிதியான் ஆசிரமத்தில் மயில் வாகனம் சுவாமிகளின் 20 ஆவது குருபூசை தினத்தையொட்டி தரம் 6 தொடக்கம் 11 வரை கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களிடையே 3 பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் தொண்டமானாறு சந்நிதியான் ஆசிரமத்துக்கு விண்ணப்பித்து விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். போட்டிகள் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

வெற்றிபெறும் மாணவர்களுக்கு அடுத்தமாதம் 11 ஆம் திகதி நடைபெறும் குருபூசைத் தினத்தில் வைத்து பணப் பரிசிலும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

# தென்மராட்சி பிரதேச செயலக மலருக்கு ஆக்கங்கள் கோரல்

தென்மராட்சி —

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா - எதிர்வரும் ஓகஸ்ட் மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

இந்தத் திறப்புவிழாவையொட்டிய மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. இது தொடர்பாக நேற்றுமுன்தினம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் - பிரதேச செயலரைத் தலைவராகக் கொண்ட மலர் வெளியீட்டுக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

இந்த மலரின் இணை ஆசிரியர்களாக செ.சுதாகரனும், பத்மராணியும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த மலருக்கான ஆக்கங்கள் பிரதேச செயலக அலுவலர்களிடமிருந்தும், தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆக்கவாளர்களிடமிருந்தும் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ஆக்கங்களை - 'ஆசிரியர் மலர் வெளியீட்டுக் குழு', பிரதேச செயலகம், தென்மராட்சி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (24)

# சிறப்பாக நடைபெற்ற பொன்விழா நிகழ்வும் தமிழொலி மாணவர் மன்ற ஆண்டுவிழாவும்

யாழ்ப்பாணம் —

தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய பொன்விழாவும், தமிழொலி மாணவர் மன்றத்தின் 14 ஆவது ஆண்டு நிறைவுவிழாவும் - கடந்த 9 ஆம் திகதி ப.திருச்செல்வம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு வடமராட்சி வடக்கு பிரதேசசெயலர் இ.வரதீஸ்வரன் முதன்மை விருந்தினராகவும், சிவஸ்ரீ தியாக சோமஸ் கந்ததராஜக் குருக்கள், சமாதான நீதிவான் இ.சிவபுண்ணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில், நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை நினைவுபடுத்தும் பொன்விழா பெயர்ப்பலகையை பிரதேச செயலர் திரைநீக்கம் செய்து வைக்க, ஆசியுரையை சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள் வழங்கினார்.

தொடர்ந்து கடந்தவருடம் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், தும்பளை தெற்கு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் தமிழ் மொழி மாணவர் மன்ற மாணவர்கள் 20 பேருக்கு சேமிப்புப் புத்தகங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் - தேசிய கலை, கலாசாரப் பிரிவினரால் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி பல பரிசில்களைப் பெற்றுக்கொண்ட கலையரசு பா.வேதநாயகத்துக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இறுதியாக மன்ற மாணவர்களின் கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து - கலையரசு பா.வேதநாயகத்தின் நெறியாள்கையில் 'தண்டனை' சிந்துநடையிலான நாடகமும் அரங்கேறியது.

## யாழ். மின்சார சபைக்கு

# நிரந்தரக் கட்டடம் இன்மையால் பணிகளை விஸ்தரிப்பதில் சிரமம்

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட மின்சார சபையினர் தமக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு, யாழ்.நகரசபையை அண்டியதாகக் காணி கேட்ட போதும், அவ்வாறு கட்டடம் அமைப்பதற்குக் காணி இல்லை என யாழ். பிரதேச செயலர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

தற்போது மின்சாரக் கட்டணங்களுக்கான நிதி கொழும்பு சென்று அறவிட்ட பின்னர், அங்கிருந்துதான் பற்றுச்சீட்டுகள் இங்கு வருகின்றன.

இதற்கு மாறாக - மின்சாரக் கட்டணங்களை யாழ்.மாவட்டத்திலேயே செலுத்தி, பற்றுச் சீட்டுக்களை உடனே பெற்றுக் கொள்ளும் நடைமுறையைக் கொண்டு வருவதற்கு வசதியாக, மின்சார சபைக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்று இல்லாமல் உள்ளது.

எனவே, தமக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைப்பதற்கு யாழ். நகரப்பகுதியில் காணி தருமாறு யாழ். மாவட்ட மின்சார சபையினர், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்குக் கடிதம் எழுதிய போதும், அவ்வாறு யாழ்.நகரப்பகுதியில் காணி இல்லை என யாழ். பிரதேச செயலாளரால் மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் யாழ்.மாவட்ட மின்சார சபைக்கு - யாழ்.நகரப் பகுதியில் நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணிகள் கேள்விக் குறியாகி உள்ளது. மின்சார சபை அலுவலகம் யாழ்.நகரப் பகுதியில் தற்போது வாடகைக் கட்டடம் ஒன்றில் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## பொதுக்கூட்டம்

மட்டுவில் —

தென்மராட்சி, வரணி - இடைக்குறிச்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் நியாப் திட்டவேலைகள் சம்பந்தமான மீள்பார்வையும், அதன் அனுபவங்களைப் பகிர்வதற்குமான கூட்டம் - எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும்படி கிராமத்தின் பிரமுகர்களையும், பொது அமைப்பின் பிரதிநிதிகளையும் பிரதேச செயலர் அழைத்துள்ளார். (24)



பண்டத்தரிப்பு பிரதேச முன்பள்ளி குடும்ப விளையாட்டு விழாவின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் க.சின்னத்தம்பி மங்கள விளக்கேற்றுவதையும், முன்பள்ளி ஆசிரியை வி.சிவப்பிரியா, சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். கந்தசாமி ஆகியோரையும் படத்தில் காணலாம். (94)

## கிளைக்குழு கூட்டம்

மட்டுவில் —

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மட்டுவில் வடக்கு கிளையின் இல 10 பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 10.30 மணிக்கு கிளைக்கட்டடத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கிளைக் குழுவுக்கான 9 அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளதால், அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரான எஸ்.குமாரவேலு அறிவித்துள்ளார். (24)






## நெடுந்தீவில் கால்நடைகளுக்கு

# தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்து ஏற்றல்!

நெடுந்தீவு —

நெடுந்தீவு பிரதேசத்திலுள்ள கால்நடைகளுக்கு தொண்டை அடைப்பான் நோய் தடுப்பு மருந்து ஏற்றல் - எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 20 ஆம் திகதி புதன்கிழமை வரை பகுதி பகுதியாக இடம் பெறவுள்ளது.

18 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு சீக்கிரியாம் பள்ளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, ஜே/03 கிராம அலுவலர் அலுவலகம் என்பவற்றிலும், 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் மதியம் 12 மணிவரை ஐக்கியதீப சனசமூக நிலைய மண்டபம், மேற்கு பொது நூலகம். மாலை 2 மணிக்கு மேற்கு சனசமூக நிலையம். மாலை 3 மணிக்கு மேற்கு பாலமுருகன் முன்பள்ளி என்பவற்றிலும், 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு கிழக்கு ஐங்கரன் சனசமூக நிலையம், காலை 9 மணிக்கு கிழக்கு மாதா கோவில் என்பவற்றிலும் இந்தத் தடைமருந்து ஏற்றல் இடம் பெறவுள்ளது.

வேலணை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த மருந்தேற்றலில் சகல கால்நடை உரிமையாளர்களையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு நெடுந்தீவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்க நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (113)

# சின்னஞ்சிறு செய்திகள்

## விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம் —

வலி. வடக்கு பிரதேசசபை பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.00 மணிக்கு விசாலாட்சி வித்தியாசாலை, விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## கலந்துரையாடல்

மட்டுவில் —

சாவகச்சேரி வலய அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடலொன்று - நாளை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு சகல உறுப்பினர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (24)



# நிறுவனங்கள் சிறந்த ஊதியக் கொள்கையையும் ஊக்குவிப்பு உத்திகளையும் பின்பற்ற வேண்டும்

நிறுவனங்களில் பணியாற்றுவதற்குத் திறமையான பணியாளர்கள் தேவை. திறமைசாலிகளைக் கவர்வதற்கு ஏற்றவாறு ஊதியம் அமைய வேண்டும். ஊதியம் குறைவாயிருந்தால், அவர்கள் அதிக ஊதியம் தரக்கூடிய நிறுவனத்தை நாடிச் சென்று விடுவார்கள். எனவே, ஒரு நிறுவனத்தின் ஊதியக் கொள்கை திறமைசாலிகளைக் கவர்வதாகவும், அவர்களைத் தொடர்ந்தும் நிறுவனத்தில் தக்கவைக்கக் கூடியதாகவும் அமைய வேண்டும்.

ஊதியம் அல்லது சம்பளம் பெரும்பாலும் மாதக்கணக்கில் கொடுக்கப்படுகிறது. கூலி மட்டும் நாள் கணக்கில், வாரக்கணக்கில் அல்லது மாதக் கணக்கில் கொடுக்கப்படுகிறது. இப்படிக் கொடுக்கப்படும் ஊதியம் அல்லது கூலி திறமை அடிப்படையிலும், உற்பத்தி அடிப்படையிலும், கால அடிப்படையிலும் வேறுபடும். பகுதி நேரமாக வேலை செய்பவர்கள் ஒரு மணிக்கு இவ்வளவு என்று ஊதியம் பெறுவார்கள். உற்பத்தி அலகுகள் ஒவ்வொன்றுக்கும் இவ்வளவு என்றும் ஊதியம் கணக்கிடுவதுண்டு. தரம் வாய்ந்த உற்பத்திப் பொருட்களை உருவாக்குபவர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்கப்படுவதும் உண்டு. இவ் வாறு



மாறுபட்ட ஊதியம் வழங்குவதால், திறமைசாலிகளுக்கு அதிக ஊதியமும், திறமை குறைந்தவர்களுக்குக் குறைந்த ஊதியமும் கிடைக்கிறது. திற மையை அதிகரித்துக் கொள்ளவும், நேரத்தை வீணாக்காமல் உற்பத்தியில் கவனம் செலுத்தவும் இத்தகைய மாறுபட்ட ஊதியக் கொள்கை உதவுகிறது.

ஒரு வேலையைச் செய்வதற்குச் சராசரியாக எவ்வளவு நேரம் பிடிக்கும் என்பதைப் பணியளவீடு மூலம் கணித்து விட முடியும். ஒரு பணியாளர் தனக்குரிய பணியைச் செய்வதற்குரிய காலத்தை மிச்சப்படுத்துகிறார் என்றால், அவருக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட வேண்டும். இதனால் அவர் தொடர்ந்து அதிக அலகுகளை உற்பத்தி செய்ய விரும்புவார்.

ஒரு நாளைக்கு எட்டுமணி நேரம் தான் வேலை செய்ய வேண்டும் என்று தொழிலாளர் சட்டம் இருக்கிறது. ஆனால், தொழிலாளரே முன்வந்து கூடுதல் நேரம் வேலை செய்ய விரும்பினால், அவர் கூடுதலாக வேலை செய்யும் நேரத்துக்கு இரட்டிப்பு ஊதியம் வழங்கப்படும். இது உற்பத்தி அளவை இருக்கும் தொழிலாளர்களைக் கொண்டே உயர்த்துவதற்கு கூடுதல் நேரப்பணி உதவுகிறது.

சில வேலைகளைத் தனிநபர் மட்டுமே செய்துவிட முடியாது. ஒரு குழுவாக இருந்து, பல தொழிலாளர்களும் சேர்ந்து செய்தால்தான் வேலை முடியும். இவ்வாறு குழுவாகச் சேர்ந்து உற்பத்தியைப் பெருக்கும் போது, அந்தக் குழுவிலுள்ள அனைவருக்குமே ஊக்க ஊதியம் வழங்கப்படும். இது குழும ஊக்க ஊதியம் என்று கூறப்படும்.

ஒரு நிறுவனத்தின் உற்பத்திக் காரணிகளாக நிலம், மூலதனம், தொழிலாளர், பணியமைப்பு ஆகியவை இருந்தாலும், பணியமைப்புக்கும், தொழிலாளர்களுக்குமே உற்பத்தித் திறனை உயர்த்தவும், குறைக்கவும் வல்லமை உண்டு.

எனவே நிலத்துக்கு வாடகையும், மூலதனத்துக்கு வட்டியும் கொடுப்பது போன்று, தொழிலாளர்களுக்குக் கூலியை மட்டும் கொடுத்துவிட்டு நின்று விட முடியாது. நிறுவனத்தின் இலாபத்தில் ஓரளவாவது அவர்களுக்குப் பங்கு தந்தாக வேண்டும். இத்தகைய இலாபப் பங்கு மேலூதியமாகப் பெரும்பாலும் பண்டிகைக் காலங்களில் வழங்கப்பட்டு வருகிறது.

ஊதியம் என்பது ஒவ்வொரு நிலையிலும் குறைவாகத் தொடங்கி, ஆண்டு தோறும் உயர்ந்து வரவேண்டும். ஒருவர் தனது பணியில் நாளுக்கு நாள் பயிற்சியும், திறமையும் பெற்று வருவது போன்று, அவருடைய ஊதியமும் ஆண்டுதோறும் உயர்ந்து செல்ல வேண்டும். அப்போதுதான் புதிய தொழிலாளருக்கும், மூத்த தொழிலாளருக்கும் இடையே ஊதிய வேறுபாடு இருக்கும்.

ஊதியம் மட்டும் உழைப்புக்கு ஈடு செய்துவிடாது. ஒரு தொழிலாளர் -ஒரு நிறுவனத்தில் சேர்ந்து விட்டால், அவர் அந்த நிறுவனத்தில் குடும்ப உறுப்பினராகிவிடுகிறார். எனவே அவருடைய குடும்ப, சமூகத் தேவைகளையும் நிறைவு செய்ய வேண்டிய கட்டுப்பாடு நிறுவனத்துக்கு உள்ளது.

தொழிலாளரை ஊக்குவிப்பதற்கு நிறுவனம் பல வழிமுறைகளைக் கையாள வேண்டியுள்ளது. ஒரு பணியில் நீண்ட காலம் இருந்தால், அவருக்குச் சோர்வும், அக்கறையின்மையும் ஏற்படும். எனவே, சூழல் முறையில் பல்வேறு பணிகளிலும் அவர் ஈடுபடுத்தப்பட வேண்டும். பல் வேறுபட்ட வசதிகள் தொழிலாளரை நிறுவனத்துடன் ஒன்றவைக்கும் கருவிகளாகும்.

ஊக்குவிக்காமலேயே தொழிலாளர் பணி செய்யமாட்டார்களா என்ற கேள்வி எழலாம். மனிதர்கள் வேறுபட்டவர்கள். அனைவரும் ஒரே மாதிரியான உணர்வு படைத்தவர்கள் அல்லர். சிலர் சோம்பேறிகளாக இருப்பர். விரட்டிவேலை வாங்க வேண்டியிக்கும். சொன்னால் தான் செய்வார்கள். சிலர் தாமாகவே ஆர்வத்துடன் வேலை செய்து, பாராட்டை எதிர்நோக்குவார்கள். பொதுவாக, மனிதனுக்கு அடிப்படைத் தேவைகள் உடல் சார்ந்தவை. பசி, நித்திரை, ஓய்வு ஆகிய தேவைகள் நிறைவு செய்யப்படல் வேண்டும். அடுத்த நிலையில் பாதுகாப்புத் தேவைகள் எழுகின்றன.


தன் சமூகத்தில் தனக்கு நன்மதிப்பு வேண்டும் என்று ஒவ்வொரு மனிதனும் விரும்புகிறான். இறுதியாக வாழ்வின் பயன் என்ன, நோக்கம் என்ன என்று சிந்திக்கத் தொடங்குகின்றான். இத்தகைய தனிமனிதத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவே மனிதன் உழைக்கிறான். இந்தத் தேவைகளை 'மாஸ்லோவின் தேவைப் படிநிலை' என்று முகாமைத்துவ அறிஞர்கள் கூறுகின்றனர். இவற்றை நிறைவு செய்யும் வகையில் நிறுவனத்தின் தொழிலாளர் கொள்கை அமையவேண்டும்.

மனித ஆற்றல் அளவிடற்கரியது. பணி செய்வதற்குரிய நல்ல சூழலும், நல்ல தலைமையும் இருந்து விட்டால், தொழிலாளர்கள் தம் முழுத் திறனையும் வெளிப்படுத்தத் தயங்க மாட்டார்கள்.

எனவே, நிறுவனங்கள் நல்ல ஊதியக் கொள்கையையும், ஊக்குவிப்பு உத்திகளையும் பின்பற்ற வேண்டும்.

## சிறுகைத் தொழில்

# யோக்கட்* தயாரித்தல்



பெருமளவில் மாடுகள் வளர்க்கப்படும் வன்னிப் பிரதேசத்தில் பெறப்படும் பசுப்பால் - போதிய சந்தைவாய்ப்பின்மையால் வீணா கிப் போகின்றது. இந்தப் பாலை யோக்கட்டாகத் தயாரிப்பதன் மூலம் 6 நாட்களுக்குப் பழுதடையாது வைத்திருக்கமுடியும்.

யோக்கட் செய்வதற்கு இயந்திர சாதனங்களோ, உபகரணங்களோ பெருமளவில் தேவைப்படுவதில்லை. மூலதனமும் மிகக்குறைவேயாகும். குடிசைக் கைத்தொழிலாகவே இதனை மேற்கொள்ளலாம்.

சனச்செறிவு அற்ற பிரதேசங்களில் கிடைக்கும் பாலை யோக்கட்டாகத் தயாரித்து, சனச்செறிவுள்ள நகரப்பகுதிகளில் சந்தைப்படுத்தலாம். இது சத்துமிக்க உணவாகையால், இதற்கான மதிப்பு நிறைய உண்டு. வரட்சிக்காலங்களில் பெருமளவில் யோக்கட் செய்முறை பற்றிய அறிவுடன் இந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம். காலம் செல்லச் செல்ல தொழில்நுட்ப தேர்ச்சி கிடைக்கும். இதன் மூலம் யோக்கட்டின் தரத்தை உயர்த்தி, விற்பனையை அதிகரிக்கலாம்.

**மூலப் பொருட்கள்**- பசுப்பால் ,சீனி, ஜெலற்றின் , வனிலா, நிறக்கலவை, யோக்கட் கல்ச்சர் ஆகியன.

**உபகரணங்கள்** - குளிர்சாதனப் பெட்டி, பிளாஸ்ரிக்பேசின்கள், யோக்கட்கப்.

குளிர்சாதனப் பெட்டி ஒன்றைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தி அளவைப் பெருக்கிக் கொள்ளலாம்.

**யோக்கட் செய்முறை**

ஜெலற்றினை சிறிதளவு சுடுநீரில் கரைக்கவேண்டும். பிரமாணத்துக்கேற்ப சீனியைப் பாலுடன் கரைக்க வேண்டும். இந்தக் கரைசலுடன் தண்ணீரில் கலந்த ஜெலற்றினை நன்றாகக் கலக்க வேண்டும். இந்தக் கரைசலைக் கொதிக்கவைத்து 42 பாகை சென்டிக்கிறேட் வரை ஆறவைக்க வேண்டும்.

கல்ச்சர், நிறக்கலவை, வனிலா ஆகியவற்றைப் பாற்கரைசலுடன் சேர்த்து நன்றாகக் கலந்து, யோக்கட் கப்புக்களில் ஊற்றவேண்டும். 5-7 மணித்தியாலங்களுக்கு அறை வெப்ப நிலையில் கட்டிபட விட்ட பின், குளிர்சாதனப் பெட்டியில் வைக்க வேண்டும். பின் சந்தைப்படுத்தலாம்.

**பிரமாணங்கள்**

பசுப்பால் - 3 லைந்து
சீனி - 1/4 கிலோகிராம்
ஜெலற்றின் - 0.5 அவுன்ஸ்
வனிலா - தேவைக்கேற்றளவு

நிறக்கலவை (மெல்லிய மஞ்சள் ) - சேர்க்கவும். யோக்கட் கல்ச்சர் இப்பிரமாணங்களுக்கேற்ப தயாரிக்கும் போது, 25-30 கோப்பை யோக்கட் பெறலாம்.

**குறிப்பு**


1. சீனியின் அளவைத் தேவையான அளவுக்கு கூட்டிக் குறைக்கலாம்.
2. ஜெலற்றினின் அளவைக் கூட்டி அல்லது ஆடை நீக்கிய பால் சேர்த்து யோக்கட்டை கட்டிபட வைக்கலாம்.
3. அறை வெப்பநிலையில் கட்டியாகிய யோக்கட்டை, குளிர்சாதனப் பெட்டியில் வைக்காவிட்டால், தண்ணீர் பிரிந்துவிடும். அத்துடன் யோக்கட் சிறிது சிறிதாகப் புளிப்புத் தன்மையடைந்துவிடும்.
4. பாற் கரைசலைக் கோப்பைக்குள் ஊற்றியபின், 42 பாகை சென்டிகிறேட் வெப்பநிலையில் வைத்திருந்தால் 1 மணித்தியாலத்திலும் குறைவான நேரத்தில் கட்டியாகும்.

**சுவையூட்டல்**

1. சுவையூட்டப்படாத யோக்கட்
இதற்கு எந்தவிதமான சுவைப் பதார்த்தமும் சேர்க்கப்படுவதில்லை.
2. சுவையூட்டிய யோக்கட் :
ஸ்ரோபரி, வனிலா, ஆகியவற்றின் சுவைப் பதார்த்தங்களைக் கலந்து தயாரிக்கலாம்.
3. பழயோக்கட்:
அன்னாசி, வாழைப்பழம் ஆகிய பழங்களைச் சிறு துண்டுகளாக வெட்டி யோக்கட்டுடன் சேர்க்கலாம்.
4. மரக்கறி யோக்கட்:
கரட், கீரை, பச்சைமிளகாய் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 50/= | 60/= | 40/= | 50/= | 60/= |
| வெண்டிக்காய் | 15/= | 20/= | 30/= | 10/= | 15/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 80/= | 80/= | 90/= | 80/= | 100/= |
| கத்தரிக்காய் | 40/= | 30/= | 40/= | 30/= | 40/= | 20/= |
| பாகற்காய் | 80/= | 50/= | 60/= | 40/= | 50/= | 60/= |
| கரட் | 80/= | 75/= | 80/= | 50/= | 70/= | 80/= |
| பீற்றூட் | 35/= | 20/= | 30/= | 30/= | 40/= | 40/= |
| முருங்கைக்காய் | 120/= | 100/= | 100/= | 110/= | 100/= | 120/= |
| வெங்காயம் | 55/= | 50/= | 40/= | 50/= | 60/= | 60/= |
| பச்சை மிளகாய் | 45/= | 40/= | 50/= | 35/= | 40/= | 60/= |




# நிலையான அபிவிருத்தி நடவடிக்கைகளில் திட்டமிடலினதும், முகாமைத்துவத்தினதும் அவசியமும், முக்கியத்துவமும்

சென்றவாரத் தொடர்ச்சி...

சூழலில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்களுக்கே EIA முக்கியத்துவம் கொடுக்கிறது. சிறிய அபிவித்திக்கு ஆரம்ப சூழல் பரிசோதனைகள் செய்தால், போதுமானது. இதன் மூலம் சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக் கொள்வது முக்கியமானது.

இலங்கையின் மின்சாரசபை - இலங்கையில் அதிகரிக்கும் மின் தேவையை பூர்த்திசெய்வதற்கான மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க வேண்டிய தேவை 1990 ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அதனால் நிலக்கரியை எரித்து, வெப்ப சக்தியைக் கொண்டு, மின்னை உற்பத்தி செய்வதே பொருளாதார ரீதியில் சிறந்தது என முடிவெடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் நிலக்கரி மின் நிலையத்தை திருகோணமலை துறை முகப்பகுதியில் அமைப்பதே சிறந்தது எனத் தீர்மானிக்கப்பட்டது. துறைமுக நீர், மக்கள் குடியிருப்பு முதலிய பல காரணிகளை ஆராய்ந்த பின்பே, அந்த முடிவு எடுக்கப்பட்டது. இந்த முடிவு பொருளாதார கட்டடப் பொறியியற் காரணிகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவாகும். திருகோணமலை துறைமுகப் பகுதியில் அனல் மின் நிலையத்தை அமைப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டதன் பின், சூழலில் அனல் மின் நிலையம் ஏற்படுத்தக் கூடிய பாதிப்பை ஆராய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்த அடிப்படை விடயங்கள் வருமாறு-

1. திருகோணமலை துறை முகப்பகுதியில் ஏற்படக்கூடிய மாற்றங்கள்.

2. நிலக்கரி மின் நிலையத்திலிருந்து வளிமண்டலத்துக்குச் செல்லும் வாயு.

3. மின் நிலையத்தை குளிரவைப்பதற்கு நீரைப் பெறுவதால், ஏற்படக் கூடிய விளைவுகள்.

4. மின் நிலையத்திலிருந்து சூடான நீரை வெளியேற்றுவதால், ஏற்படும் விளைவு.

5. நிலக்கரியை கப்பலிலிருந்து இறக்கும் போதும், மின் நிலையத்துக்குக் கொண்டு செல்லும் போதும், மின் நிலையத்தில் சேர்த்து வைக்கும் போதும் ஏற்படும் விளைவு.

6. எரிந்த நிலக்கரி சாம்பல் சேகரித்து வைத்து பின் அகற்றும் போது ஏற்படும் விளைவுகள்.

இந்தப்பொதுக் கருத்துகளின் அடிப்படையில் விபரமான தகவல் சேகரிக்கப்படும். பொது விடயங்கள் தரவு சேகரிப்புக்கு உகந்தவகையில் திருத்தியமைக்கப்படும். அவ்வாறு திருத்தப்பட்ட பின், தரவு சேகரிக்க வேண்டிய விடயம் அட்டவணைப்படுத்தப்படும்.

1. மின்நிலையம் அமைக்கப்படவுள்ள இடத்தைச் சூழவுள்ள கடற்கரை வாழிடம்.

2. மின் நிலையம் அமைக்கப்படவுள்ள இடத்தைச் சூழவுள்ள நிலப்பகுதி வாழிடங்கள்.

3. நடைமுறையிலிருந்த நில உபயோகம்.

4. நடைமுறையிலிருந்த பொருளாதார நடவடிக்கைகள்.

5. சூடானநீரை வெளியேற்றும்பகுதி.

6. துறைமுகப் பகுதியும், அதைச் சூழவுள்ள நீரியல் நிலைமைகளும்.

7. துறைமுகத்தின் ஆழம் பற்றிய விபரம். அருகேயுள்ள நீர் நிலைகளின் ஆழம், துறைமுகத்தின் நீரோட்டம், வெப்பநீர் நீருடன் கலக்கும் பிரதேசம் காற்று நீரோட்டத் தொகுதியால் ஏற்படும் மாற்றம்.

8. அந்தப் பகுதியில் நிலவும் மழை வீழ்ச்சியின் விபரம், காற்றின் திசையும் அதன் திசை மாற்றமும்.

9. வளிமாசுறுதல் அது இலங்கையின் வெவ்வேறு பகுதிகளுக்குப் பரவுதல்.

இந்த விடயங்கள் சம்பந்தமாகச் சேகரிக்கப்படும் தரவுகள், தாவரங்கள் விலங்குகள் அழியும் ஆபத்துக்கள், மனித குடியிருப்புகளில் ஏற்படுத்தும் பாதிப்புகள், தற்போதய வருங்கால அபிவிருத்தி திட்டங்களில் ஏற்படும் தாக்கங்கள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இந்த உதாரணத்திலிருந்து சுற்றாடல் தாக்க மதிப்பீட்டால் எவ்வாறு ஒரு அபிவிருத்தித் திட்டத்தை சூழலுக்கு ஏற்றவாறு அமைக்கலாம் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

சூழல் பாதிப்புகளைக் கருத்தில் கொள்ளாது மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களும் தோல்வியடையும் நிலையிலுள்ளது.

உதாரணமாக - மகாவலி அபிவிருத்தித் திட்டம் சூழலில் ஏற்படுத்தும் பாதிப்புகள் மிக விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இது வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட முதலாவது கணிப்பாகும். விரைவான கணிப்புகளை மேற்கொண்டமைக்குக் காரணம், மகாவலித் திட்டம் ஏற்படுத்திய பாரதூரமான விளைவுகளே. இலங்கையின் மிக நீளமான மகாவலி கங்கை, சில காலங்களில் பெருக்கெடுக்கும். எஞ்சிய காலப்பகுதியில் அதில் குறைந்தளவு நீர் மட்டமே காணப்படும். விவசாயத்துக்கு உதவிய ஆற்றின் பல இடங்களில் அணைகட்டப்பட்டு, பாரிய நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட்டதோடு, அந்தநீர்த் தேக்கங்களில் தேக்கப்பட்ட நீர், அரங்கங்கள் மூலமும், கால்வாய்கள் மூலமும் பாய்ச்சப்பட்டு, வயல்களுக்குப் பாசன வசதி ஏற்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் சூழலில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியது. கொத்மலை, விக்ரோரியா, நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட்டன. பல குடியிருப்புகளும், காடுகளும் நீரில் மூழ்கின. நீர்த்தேக்கங்களின் விளைவாக, அந்தப் பகுதியில் சாரீரப்பதன் அதிகரித்தது. இது மழைவீழ்ச்சியையும், தாவரங்களையும் பாதிக்காது. கால்வாய்கள் சென்ற பகுதிகளிளெல்லாம் காடுகள் அழிக்கப்பட்டன. விவசாயம் ஆரம்பிக்கப்பட்டது. காட்டில் வசித்த நுளம்புகள் - மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் நோய் விளைவித்தன. சேனைப் பயிர்கள் செய்த இடத்தில், பாசனப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. சிறுபோகப் பயிர்க்காணியில் மூன்று போகப் பயிர் செய்யப்பட்டது.

மகாவலி அபிவிருத்தித்திட்டத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் மதிப்பிடப்பட்டன. அது போன்று நீர்ப்பாசனத்தால் ஏற்பட்ட விளைவுகளால் சல்வீனியாபோன்ற களைகளின் பெருக்கம், காணிகள் உவராதல், வயல்களில் நீர் வடிந்து பள்ளமான பகுதியில் தேங்குதல் போன்ற பிரச்சினைகளும் ஆராயப்பட்டன.

சூழல் பாதிப்புகளைக் கருத்திற்கொள்ளாது, மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களால் ஏற்படக்கூடிய பாதக விளைவுகளுக்கு அஸ்வான் உயர் அணை சிறந்த உதாரணமாகும். இந்த அணை நைல்நதியில் 1964 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. சூடான், எகிப்து ஆகிய நாடுகளுக்கூடாகப் பாய்ந்து, மத்திய தரைக் கடலில் கலக்கும் நைல்நதி, ஆண்டு தோறும் பெருக்கெடுப்பது வழக்கம். நைலின் வெள்ளம் அள்ளிவரும் பசளை மண் பள்ளத்தாக்கில் படிந்து, பயிர்ச் செய்கைக்குத் தேவையான வளத்தை வழங்குகிறது.

ஆனால், வெள்ளப்பெருக்கு அழிவைத் தடுத்து, வெள்ள நீரைத் தேக்கி, பசளைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்காக 1902 ஆம் ஆண்டில் முதலாவது அஸ்வான் அணை கட்டப்பட்டது. ஆரம்பத்தில் இந்த அணை நன்மைபயத்த போதிலும், காலப்போக்கில் பாதகமான விளைவுகளை உண்டுபண்ணியது. ஆற்றின் கரையில் கிடந்த நீரூற்றுகள் வற்ற ஆரம்பித்தமை முக்கிய பாதக விளைவாகும். வரட்சிக் காலத்தில் நீரூற்றுகளில் உள்ள நீர், நைல்நதிக்குள் வடிய ஆரம்பித்தது. அத்துடன் அஸ்வான் நீர்த்தேக்கம் ஆவியாதல் மூலம் பெருமளவு நீரை இழந்தது. அஸ்வான் அணை 1946 ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது. அஸ்வான் உயர் அணை 2800 சதுர கிலோ மீற்றர் நிலத்துக்குப் பாசன வசதியளித்தது. சிறுபோகப் பயிர்செய்த இடங்களில், இருபோக பயிர் செய்யப்பட்டது. தானிய உற்பத்தி பலமடங்கு அதிகரித்தது. அதேவேளை சூழல் பெருமளவு பாதிப்புற்றது. சில சூழல் பாதிப்புகள் சீர்செய்ய முடியாததாயின.

நீர் ஊற்றுகளை உயரணை வெகு



விரைவாகப் பாதித்தது. ஆவியாதலும் அதிகரித்தது. வெள்ள அழிவை எடுத்த அஸ்வான் அணை வெள்ளம் அள்ளிவந்த பசளை, மண் அணையைத் தாண்டிச் செல்லாது தடுத்தது. இதனால் அணைக்கு அப்பாலுள்ள பகுதி வளம் குறைந்தது. தடுக்கப்பட்ட வண்டல் மண் அணையைத் தாக்க ஆரம்பித்தது. அத்துடன் நைல்நதியுடன் வரும் போசனைப் பொருட்கள் பிளாந்தன் என்ற நுண்ணங்கிகள் பெருகுவதற்கு வழிவகுத்தன.

அஸ்வான் அணை போசனைப் பொருட்கள் மத்திய தரைக் கடலினுள் பாய்வதைக் குறைத்தது. அணை கட்டப்பட்டபின் ஸ்கிஸ் ரோசோமியாசிஸ் என்ற நோய் அதிகரித்தது.

மனித குருதியில் வாழும் ஒட்டுண்ணிப் புழுக்கள் இந்த நோய்க்குக் காரணமாகும். இந்தப் புழு சிறிதாக இருக்கும் போது நத்தையில் வாழும். அஸ்வான் அணை நத்தை பெருகுவதற்கு வழிவகுத்தது. அணை கட்டப்பட்டதன் பின், நுளம்பு பெருகியது. மூளைக்காய்ச்சல் பரவியது. பாசனக் காணிகள் உவரானது.

அடுத்ததாக நாட்டின் வருமானத்துக்காகப் பாரிய சூழற் பிரச்சினையை எதிர்நோக்கிக்கொண்டிருப்பது, பசுபிக் சமுத்திரத் தீவான நிவாறு தீவாகும். இந்தத் தீவானது முன்பொரு காலத்தில் பொஸ்பேற்றுப் பாறையினால் மூடப்பட்டிருந்தது.

அந்த நாட்டின் வருமானம் பொஸ்பேற்றிலேயே தங்கியிருந்தது. ஆனால், அந்த நாடு சீரான திட்டமிடல் முகாமைத்துவமின்மையால் பெருமளவு பொஸ்பேற் ஏற்றுமதி செய்து வருவதால், தனது வளத்தை இழந்து வருகிறது. மிகவிரைவாகப் பொஸ்பேற் கிடைப்பது கஷ்டமாகிவிடும். இந்த நிலைதான் உலகுக்கு ஏற்படும்.

இலங்கையிலுள்ள எப்பாவல என்ற இடத்திலும் பொஸ்பேற் பாறையின் அகழ்வு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பொஸ்பேற் வளம் குன்றுவது மட்டுமல்லாது, பெரும் சூழல் பாதிப்புகளையும் எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

தாவர விலங்குகளினதும் வளர்ச்சிக்கு மிக மிக சிறிய அளவுகளிலேயே தேவைப்படும். போசனைப்பொருள், பொஸ்பேற் போதியளவில் கிடைக்காவிட்டால் பயிர்ச்செய்கை பாதிக்கப்படும். இன்று பொஸ்பேற் அதிகளவில் அகழ்தல் மேற்கொள்ளப்படுவதால், பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படும் பொஸ்பேற் விரயமாக்கப்பட்டு, சூழலைப் பெருமளவு பாதிக்குமளவில் உள்ளது.

எனவே மேலே கொடுக்கப்பட்ட உதாரணங்கள் சீரான திட்டமிடல் முகாமைத்துவம் இல்லாமையால், அபிவிருத்தித் திட்டத்தால் ஏற்பட்ட சூழற் பாதிப்புக்கான விளக்குகின்றன. எனவே மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அபிவிருத்தித் திட்டம் இன்றியமையாததாகும்.

அதேவேளை எல்லா அபிவிருத்தித் திட்டங்களும் சூழலைப் பாதிக்கத்தான் செய்கின்றன. அபிவிருத்தித் திட்டங்களுக்கு அங்கீகாரம் அளிப்போர் இதனால் ஏற்படும் நன்மைகளையும், சூழற் பாதிப்புகளால் ஏற்படும் தீமைகளையும் சீர்தூக்கிப் பார்த்து, முடிவெடுத்தால் தான் நாட்டை நீடித்த, நிலைத்த அபிவிருத்திக்கு இட்டுச் செல்லமுடியும்.

சூழல் திட்டமிடலும், முகாமைத்துவமும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கிறது என்ற ஒரு கருத்து நிலவுகிறது. அது தவறானது. இந்தத் திட்டமிடல் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக அமைவதில்லை.

அபிவிருத்தி நடவடிக்கைகளை வருங்கால சந்ததியினருக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகளைக் குறைக்கும் சீரிய பணியையே சூழலைத் திட்டமிடலும், முகாமைத்துவமும் மேற்கொள்கிறது.

(முற்றும்)

அ.தமிழ்ச்செல்வி
பி/சுற்றாடல் உத்தியோகத்தர்,
மாவட்ட செயலகம், கிளிநொச்சி.

# போராளிகளின் உதிரம் அநியாயமாக சிந்துவதை பொறுக்கமாட்டோம்

## முல்லைத்தீவு தேசிய எழுச்சிப் பேரவை அறிக்கை

முல்லைத்தீவு—

கையில் ஆயுதமின்றி, கழுத்தில் நஞ்சின்றி அமைதி விலங்கைப் பூட்டிய போராளிகளைக் கொலை செய்வதை வீரம் என்று சொல்ல முடியாது. போர் ஒன்றின் மூலமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

திருகோணமலைக் கடற்புலிகளின் தளபதி லெப்டினன்ட் கேணல் டிக்கான், லெப்டினன்ட் இளம்புலி ஆகிய இரண்டு போராளிகள் உட்பட, நான்கு பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதி, போர் நிறுத்த காலங்களில் சிங்கள அரசின் அடாவடித்தனங்களால் நாம் எத்தனையோ போராளிகளை இழந்து விட்டோம். இத்தனை இழப்புகளாலும் எமது இனத்துக்கு விடிவு கிடைக்குமானால், இந்த இழப்புக்களைத் தியாக அர்ப்பணிப்பு என்று கூறலாம். ஆனால் சிங்களஅரசு ஈழ விடுதலையை முறியடிப்புச் செய்யவே கருதுவதால், எங்கள் போராட்டத்தை அமைதி விலங்கால் பூட்ட முடியாது. கையில் ஆயுதமின்றி, கழுத்தில் நஞ்சின்றி அமைதி விலங்கால் பூட்டிய போராளிகளைக் கொல்வது வீரமல்ல. இனி அவ்வாறு விடவும் முடியாது. எங்கள் தேசியத் தலைவர் இனியும் இவ்வாறு போராளிகளின் குருதி சிந்தப் பொறுத்திருப்பார் என்று கூற முடியாது.

இரண்டு போராளிகள் உட்பட, துணைப்படை வீரர்களுடன் நால்வரை இன்று நாம் இழந்து நிற்கிறோம். எந்தச் சந்தேகமும் இல்லாமல் சிங்களப் படைகளே இந்தக் கொடூரத்தைச் செய்ததால், சிங்கள அரசின் அமைதிக் காலத்தை என்றும் ஏற்பதற்கில்லை. இந்தக் கோரத்தின் பின் எம்மால் நேசிக்க வேண்டியது போரைத் தவிர, வேறொன்றுமில்லை. போர் தான் எங்கள் அமைதிக்கு வழி செய்யும். அது தவிர சிங்கள அரசு கூறும் அமைதி அழிவுக்கே. அதனால் போர்க் குணங் கொண்டு, போர்செய்து, எம் இறைமையைத் தீர்மானிக்க வேண்டும் வீரத்தமிழ்க்குலமே உப்புவெளி, செல்வநாயகபுரம் படுகொலை அமைதிக்கு வந்த சாவு மணி. இனியும் சிங்கள அரசை நம்ப முடியாது. நம்பினால் மேலும் போராளிகளை இழப்போம். ஆதலால் அனைவரும் போருக்குத் தயாராகுங்கள். போரைத் தவிர வேறுவழியில்லை என்பதை எதிரி உப்புவெளியில் சீராக உணர்த்திவிட்டான். எங்கள் போராளிகளின் உதிரம் எந்த வேளையிலும் அநியாயமாகச் சிந்தக் கூடாது. வீர வரலாற்றுடனும், ஈழ விடுதலைக்காகவும் அதை அர்ப்பணிப்போம்.

இந்தச் செய்திகூட அரசுக்கு விடும் எச்சரிக்கையாக இருக்கிறது. இது இறுதியானதும், உறுதியானதுமான செய்தியாக இருக்குமென நம்புகிறோம். தானைத் தலைவன் பொறுத்திருக்க மாட்டான். அந்தத் தலைவனுக்கு கரம் மட்டுமல்ல, உயிரையும் கொடுப்போம். அமைதியென்று எம்மினத்தை அழிக்க முடியாது. எழுவோம் நாம் எதிரிகளை அழிப்போம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முழங்காவில் – இரணைமாதா மக்களுக்கு சுயதொழில் முயற்சிக்கு கடன் வழங்கல்

முழங்காவில்—

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்புடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மேற்கொள்ளப்படும் நிகொட் திட்டத்தின்கீழ், முழங்காவில் -இரணைமாதா நகர் மக்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான கடன் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு சமூக, பொருளாதார அபிவிருத்திச் சங்கத் தலைவர் சூ.செல்வரத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கடன் திட்டத்தின் மூலம் 46 பயனாளிகளுக்கு 9லட்சத்து 72ஆயிரம் ரூபா பெறுமதியான நிதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மீன்பிடித் தொழில், சிறு வியாபாரம், கோழிவளர்ப்பு, ஆடு வளர்ப்பு ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போர்ச்சூழலால் பாதிக்கப்பட்டு, சமூக, பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் காணப்படும் குடும்பங்களுக்கு உதவும் நோக்கோடு, சுயதொழில் மூலம், அவர்களின் நாளாந்த வாழ்வை மேம்படுத்துவதற்கு வழிசெய்யும் நோக்குடன், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் பிரதேசம் தோறும் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த வகையில் இரணைமாதா நகர் கிராம மக்களின் நன்மைகருதி, இந்தச் சுயதொழில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் செயற்திட்ட இணைப்பாளர் யே.கோபி, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், சமாதான நீதிவானுமாகிய செ.சூசைநாதன் உட்பட, தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் திட்டப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# படையினரின் சோதனைகளால் கொழும்புக்கு எடுத்துச்செல்லப்படும் மீன்கள் பழுதடைகின்றன

## முல்லைத்தீவு கடற்தொழிலாளர் சங்க சமாசத் தலைவர் தெரிவிப்பு

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும் மீன்கள் -ஓமந்தை சோதனைச்சாவடியில் இராணுவத்தினரால் சோதனை செய்யப்படுவதால், பழுதடைந்த நிலையிலேயே கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன என முல்லைத்தீவு கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அ.மரியராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவில் தற்போது இடம்பெறும் மீன்பிடி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுனாமி அனர்த்தத்தின் பின்னர், தற்போது 112 வரையான மீன்பிடிப் படகுகள் மீன் பிடியில் ஈடுபட்டு வருகின்றன. பிடிக்கப்படும் மீன்களில் உள்ளூர்த் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு, ஒரு தொகுதி மீன்களையே கொழும்புக்கு ஏற்றுமதி செய்கிறோம்.

கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன்கள் - முல்லைத்தீவுக் கடற்கரையில் வைத்தே ஐஸ் பெட்டிகளில் வைக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன. இவ்வாறு எடுத்துச்செல்லப்படும் மீன்களை ஓமந்தைச் சோதனைச் சாவடியில் படையினர் நிலத்தில் கொட்டி பரிசோதனை செய்வதால், பழுதடைந்த நிலையிலேயே கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

சுனாமி இடம்பெற்று பெரும் அழிவுகளுக்குப் பின்னர், மீன்பிடியில் ஈடுபட்டுள்ள கடற்தொழிலாளர்களின் தொழில் முயற்சிகளைப் பாதிக்கும் வகையில் இராணுவத்தினரின் இந்தச் செயல் அமைந்துள்ளது.

படையினரின் இந்தச் செயல்களை எமது சமாசம் வன்மையாகக் கண்டிக்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பதிவாளர் அலுவலகம் மீண்டும் அதே இடத்தில்

முல்லைத்தீவு—

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பதிவாளர் அலுவலகம் மீளப் புனரமைக்கப்பட்டு மீண்டும் அதே இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்த அலுவலகத்துக்கென டெனிஸ் புனர்வாழ்வு நிறுவனம் போட்டோ பிரதி இயந்திரம் உள்ளிட்ட, அலுவலகத்துக்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

இதேவேளை இந்த அலுவலகத்திலிருந்த மூல ஆவணங்கள் பல சுனாமியால் அழிவடைந்ததையடுத்து, கொழும்பிலிருந்து மூல ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, வடக்கு - கிழக்கு மாகாண உதவிப்பதிவாளர் நாயகம் சதாசிவ ஐயர் தெரிவித்தார்.

கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவில் பதிவாளர் அலுவலகம் உட்பட, முக்கிய அலுவலகங்கள் பல சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஜுலை - 14

1714: நாவல் ஒன்று முதன் முதலாக தொடர்கதையாகப் பத்திரிகையில் வெளிவர ஆரம்பித்தது. ரோவர் என்ற நாவலே பிரிட்டிஷ் மெர்குரி என்ற பத்திரிகையில் வெளிவர ஆரம்பித்தது.

1789 : பிரான்சியப் புரட்சி தொடங்கியது. பாரிஸில் சித்திரவதைக் களமாக விளங்கிய பேசில் சிறைக் கூடத்தை புரட்சியாளர்கள் தாக்கிக் கைப்பற்றினர்.

1867 : பிரிட்டனின் சர்ரே என்ற இடத்தில் ரெட்ஹில் பகுதியில் அல்பிரட் நோபல் டைனமட்டின் செயற்திறனை நேரடியாகச் செய்து காட்டினார். இது அவரால் முதன் முதலாக சுவீடனில் அம்மெபெர்க் என்ற இடத்தில் 1863இல் தயாரிக்கப்பட்டிருந்தது.

1877 : முதலாவது தொலைபேசி இணைப்பு லண்டனில் கியூன்ஸ் சினிமா கலையரங்குக்கும், காண்டபாரி மண்டபத்துக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது.

1900: பெண்களுக்கான மோட்டார் பந்தயம் முதன் முதலாக பிரிட்டனில் ரேன்லாக் என்னுமிடத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் மிஸ் வெம்பிளின் என்னும் பெண் மணி வெற்றிபெற்றார்.

1917 : பின்லாந்து சுதந்திரம் அடைந்ததாக அறிவித்தது.

1919 : பிரித்தானியாவில் கட்டாய இராணுவப் பணியில் அமர்த்தப்பட்ட 30,00,000 பேர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

◆ : அமெரிக்காவில் வெளிநாட்டு வர்த்தகக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது.

1920 : யூகோஸ்லோவியா, செக்கோஸ்லோவியா, ருமேனியா கூட்டு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டன.

1931 : ஸ்பெயினின் முதல் குடியரசு நாடாளுமன்றமான கார்ட்டெஸ் முதன்முதலாகக் கூடியது.

1941 : நேசப் படைகள் சிரியாவைக் கைப்பற்றிக் கொண்டன.

1958 : ஈராக்கில் இராணுவப் புரட்சி பிரிகேடியர் ஜெனரல் அப்துல் கரீம் எல்காஸ்ஸெம் தலைமையில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது. மன்னரும், பிரதம மந்திரியும் புரட்சியாளர்களால் கொல்லப்பட்டனர். பிரிகேடியர் ஜெனரல் அப்துல் கரீம் எல்காஸ்ஸெம்மைப் பிரதமராகக் கொண்ட குடியரசு அமைச்சரவை அமைக்கப்பட்டது.

1959: அணுவால் இயங்கும் முதலாவது நீர்மூழ்கிக் கப்பலான லாங்பீச் மாஸாசூஸட்டில் கியூன்ஸி தளத்திலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்தது. இந்தக் கப்பல் 14,000 தொன் நிறையுடையது.

1964 : உளநலம், உடல் நலம், பொதுநலம், மதம், தத்துவம், வைத்தியம் முதலான பல துறைகளிலும் 300 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதிய சுவாமி சிவானந்த சரஸ்வதி கங்கைக் கரையில் மகாசமாதி அடைந்தார்.

◆ : 1964 நவம்பர் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிரகத்தை நோக்கிச் செலுத்தப்பட்ட மரீனர் - 4 என்ற விண்கலம் - செவ்வாய்க்கு 10,000 கிலோ மீற்றர் அருகே சென்றடைந்தது. தொலைக் காட்சிப் படங்களைப் பூமிக்கு அனுப்ப ஆரம்பித்தது.

1966 : இஸ்ரேலிய விமானப் படையினர் சிரியாவைத் தாக்கத் தொடங்கினர்.

1967 : சர்வேயர் - 4 என்ற விண்கலம் ஏவப்பட்டது. இது சந்திரனில் சைனஸ் மெடி என்னும் பகுதியில் நொருங்கி விழுந்தது.

1989: சோமாலியாவின் மோகடிசூவில் நடைபெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது, ஆர்ப்பாட்டக்காரர்களில் 400இற்கும் மேற்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1991 : வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப் பகுதிகளில் நடைபெற்ற படைத் தரை இறக்கத்தைத் தொடர்ந்து, ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தனர்.

1995 : இம்மாதம் 9 ஆம் திகதி இலங்கைப் படையினரால் ஆரம்பிக்கப்பட்ட முன்னேறிப்பாய்தல் இராணுவ நடவடிக்கைக்கு எதிராக, தமிழீழ விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட புலிப்பாய்ச்சல் நடவடிக்கை மூலம் முன்னேறிப் பாய்தல் நடவடிக்கை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

2000 : யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சோ.சஞ்சீவன் இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

◆ : ஈராக் சுதந்திரதினம்.

◆ : கினியா சுதந்திரதினம்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சலம்பற்றிச் சால்புஇல செய்யார்மாசு அற்ற*
*குலம்பற்றி வாழ்தும்என் பார்*

திருக்குறள்

# நமது நோக்கு

## அரசியல் குட்டையைக் குழப்பி ஆதாயம் காண முயலும் அரசு!

இந்த நாட்டில் இப்போது நிலவுகின்ற போர் ஓய்வு அமைதிச் சூழல் சீர்குலைந்து, ஏதோவோர் கையில் மீண்டும் யுத்தம் ஆரம்பிப்பதற்கான அச்சுறுத்தல் நிலை ஒன்றை ஏற்படுத்தும் நோக்குடனும், அதன்மூலம் சமாதானப் பேச்சுக்களுக்கான எதிர்காலச் சாத்தியக்கூறுகளை இல்லாமற் செய்து, பேரினவாதிகளைத் திருப்தியடையச் செய்து, தமது அரசியல் அபிலாஷைகளை எட்டவும், அதிகாரப் பதவி நிலைகளைத் தக்கவைத்துக் கொள்ளவுமே - அரசும், ஜனாதிபதியும் தீர்க்கமான முடிவொன்றை எடுத்து, அரசியல் சதுரங்கத்தில் காய் நகர்த்தல்களை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டனர் என்பது மிகத் தெளிவாகத் தெரிய ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே புத்தர் சிலை தொடர்பான விடயத்திலும், கிழக்கில் தொடரும் விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல் நடவடிக்கைகள், அவர்களின் ஆதரவாளர்கள் மற்றும் தமிழ்த் தேசியவாதிகளுக்கு எதிரான அச்சுறுத்தல் செயற்பாடுகள் குறித்தும் அரசு காட்டிவரும் அலட்சியம் மற்றும் மறைமுக ஆதரவு நிலைப்பாடு தொடர்பாக கடும் அதிருப்தி அடைந்துள்ள விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் - இன்றைய அரசோ, ஜனாதிபதியோ தமிழர் நலன்கள் மற்றும் உரிமைகள் தொடர்பான விடயங்களில் இனிமேல் எந்தக் காலத்திலும் மனவிருப்புடன் கூடிய ஆக்கபூர்வமான - நம்பிக்கையூட்டும் நகர்வுகள் எதனையும் மேற்கொள்ளப் போவதில்லை என்று தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

இரு வாரங்களின் முன்பு - பெருத்தளவில் வாய்ச்சவடால் அடித்தபடி அரசும், ஜனாதிபதியும் மேற்கொண்ட விடுதலைப் புலிகளுடனான பொதுக்கட்டமைப்புக் குறித்த உடன்பாடு, கையெழுத்திட்ட நிலையிலேயே கருகிப் போகும் சூழல் உருவாகியுள்ள நிலையில், அதனைச் செயற்படவைக்கின்ற இதயசுத்தியற்ற ஜனாதிபதி, ஆரம்பம் முதலே அதை எதிர்க்கும் பேரினவாத - சமாதான விரோத சக்திகளுக்கு முகம்கொடுக்க அஞ்சியவராக, பிரச்சினையின் வடிவத்தை மாற்றி, புதிய நெருக்கடிகளை உருவாக்கி ஒரு குழப்ப நிலையைத் தோற்றுவிக்கும் முனைப்புடன் தமது அரசியல் மூலோபாயங்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார்.

ஆனாலும், இது தொலைநோக்குச் சிந்தனையுடன் மேற்கொள்ளும் நடவடிக்கையாகக் கருத முடியாது.

இன்னும் தெளிவாகக் கூறுவதானால் 'அவதந்திரம் - தனக்கந்தரம்' என்ற பழமொழிக்கமையவே இதனால் ஏற்படும் தாக்கங்கள் அமையப் போகின்றன என்றே சொல்ல வேண்டும்.

ஒரே கல்லில் பல மாங்காய்களை வீழ்த்த நினைக்கும் ஜனாதிபதி கடைசியில் அந்தக் கல் தனது தலையில் தான் விழப்போகின்றது என்பதை அறியாமல் செயற்படுவதுதான் வேடிக்கையான விடயமாகும்.

ஏற்கனவே ஜே.வி.பியை வைத்து தனது அரசியல் எதிரிகளை வீழ்த்தத் திட்டமிட்டு, அதில் ஓரளவு வெற்றியும் பெற்ற அவர், இப்போது அதே ஜே.வி.பியாலேயே தானும் வீழ்ச்சி காணும் நிலைக்கு வந்துள்ளமை அவரது தொலைநோக்குத் திறனற்ற அரசியல் ஞானத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

பொதுக் கட்டமைப்பை உருவாக்க புலிகளுடன் உடன்பாட்டுக்கு வரவேண்டிய அவசியத்தை, சர்வதேச அழுத்தத்தின் காரணமாக புரிந்துகொண்டு நிர்ப்பந்தத்தின் பேரில் அதில் அரசைக் கையெழுத்திட வைத்த ஜனாதிபதி, அதன் மூலம் வெறுமனே புலிகளையும், சர்வதேச சமூகத்தையும் சமாளிக்க முயன்றார் என்றே கூறவேண்டும்.

- இப்போது பொதுக்கட்டமைப்பு கையெழுத்திட்ட நிலையிலேயே வெறும் ஆவணப் பதிவாக இருக்கிறது. அது இயங்கும் சாத்தியம் தென்படுவதாக இல்லை.

- திருமலை புத்தர் சிலை விவகாரம் பெரிதாகி அதுவே ஒரு இனக்கலவரமாக வெடிக்கும் நிலை தோன்றும் என்றே அரச தரப்பினர் நினைத்திருப்பார்கள். ஏனென்றால் அப்பிரச்சினையை அரசும், அரச படைகளும் கையாண்ட விதம் அத்தகைய சந்தேகத்தையே ஏற்படுத்தியது எனலாம்.


- ஆனால், அது புஸ்வாணமாகிப் போனது பேரினவாதிகளுக்கும், அரசுக்கும் கிடைத்த தோல்வியேயாகும்.

- இப்போது புலிகளின் போக்குவரத்திற்கான பாதுகாப்பு குறித்த விடயம், திருமலைத் தாக்குதல் நடவடிக்கை போன்றவை தொடர்பாக விடுதலைப் புலிகள் எடுத்துள்ள இறுக்கமான நிலைப்பாடு - அரசை இக்கட்டுக்குள் மாட்டியுள்ள நிலையில், அது குறித்து ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க முடியாமல் திணறும் ஜனாதிபதியின் அடுத்த நகர்வு எப்படி இருக்கப் போகின்றது என்பதே இப்போதைய கேள்வி.

- பொதுக்கட்டமைப்புக்கான எதிர்ப்பு
- ஜே.வி.பியினரின் பிரசார யுத்தம்
- ஹெல உறுமயவின் கண்டனங்கள்
- ஐக்கிய தேசியக் கட்சியின் எழுச்சிப் பேரணி
- அரசின் உள்ளக முரண்பாடுகள்.

எல்லாவற்றிற்கும் மேலாக - விடுதலைப் புலிகளின் நியாயமான நிலைப்பாடு ஏற்படுத்தியுள்ள நெருக்கடி நிலை.... என எல்லாமும் ஜனாதிபதியைக் குழப்பத்திற்குள் தள்ளியுள்ள சூழலில் - அவர் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள நாட்டைக் குழப்பும் உத்தியைக் கையாள முனைந்துள்ளாரோ என்ற கேள்வியை அவரின் செயற்பாடுகள் எழுப்பி வருகின்றன என்றால் அதுவே உண்மையாகும்.

## நாடும் நடப்பும்




# ஓமந்தையிலிருந்த புத்தர் சிலை மர்மமாக அகற்றப்பட்டுள்ளது!

வவுனியா

வவுனியா - ஓமந்தை பிள்ளையார் ஆலய வளவினுள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை கடந்த திங்கட்கிழமை இரவோடு இரவாக அகற் றப்பட்டிருப்பதாக, இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட கிளையினர் தமக்கு அறிவித்திருப்பதாக, விடுதலைப்புலி களின் வவுனியா மாவட்ட அரசியற் துறையினர் தெரிவித்தனர்.

புத்தர்சிலை தொடர்பாக ஆராய்வதற்கு வவுனியா மாவட்ட நீதிவான் - வன்னிப்பிராந்திய இராணுவத்தளபதி, வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் அடங்கிய குழுவினர் திங்கட்கிழமை அங்கு செல்வதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும், பின்னர் அவர்கள் செல்லவில்லை.

அன்று இரவே இந்தச் சிலையும் அகற்றப்பட்டிருப்பதாக அறிவிக்கப் படுகிறபோதும், இது தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபேசிங்க பண்டாவிடம் கேட்டபோது, இந்தச் சிலை அகற்றப்பட்டிருப்பதாகத் தனக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும், தான் நேரடியாகச் சென்று பார்வையிட்டதன் பின்னரே இதனை உறுதிப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் புத்தர்சிலை தொடர்பாக ஓமந்தை பிள்ளையார் கோவில் குருக்களால் வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## சுன்னாகம் பரிவர்த்தனை நிலையம் மூலம் 3500 பேருக்கு தொலைபேசி இணைப்புகள்

யாழ்ப்பாணம்

சுன்னாகத்தில் தற்போது ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுவரும் தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையம் மூலம், 3 ஆயிரத்து 500 தொலைபேசி இணைப்புகளை வழங்கக்கூடிய தாக இருக்கும் என ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் வடக்கு பிராந்திய பொறுப்பதிகாரி வி.யோகேந்திரன் தெரிவித்தார்.

தற்போது ஸ்ரீலங்கா ரெலிகொம்மால் சுன்னாகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கேபிள் இணைப்புத் திட்டத்துக்கு சுமார் 240 மில்லியன் ரூபா செலவிடப் பட்டுள்ளது. இதற்கென சுன்னாகம் தபாலகத்துக்கு அருகில் பரிமாற்றல் கோபுரம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் இந்தத் திட்டம் பூர்த்தியாகும் வகையில் தற்போது வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்த அவர், இந்தத் திட்டம் பூர்த்தியானதும், இந்தப் பிரதேசத்தை அண்டிய கோண்டாவில், உடுவில், உரும்பிராய் போன்ற பிரதேசங்களில் 3 ஆயிரத்து 500 பேருக்குப் புதிதாக தொலை பேசி இணைப்புகள் வழங்கக் கூடிய தாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நவோதயா பாடசாலை வாரம்

நெடுந்தீவு

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நவோதயா பாடசாலை வாரம் -2005 நிகழ்வுகள் கடந்த 11 ஆம் திகதி திங்கள் முதல் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன, நாளை மாலை 7 மணிக்கு வித்தியாலய அரங்கில் இறுதி நாள் நிகழ்வுகள், வித்தியாலய அதிபர் சாரதாதேவி கிருஷ்ணதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இறுதிநாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக தீவக வலய திட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஈ.எஸ்.மகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். அந்நிகழ்வில் - மாணவர்களின் கலைநிகழ்வுகளும், நவோதயா வாரத்தையொட்டி இடம்பெற்ற போட்டிகளுக்கான பரிசில் வழங்கலும், சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன.

நான்காம் நாளான இன்று கற்றல் - கற்பித்தல் சாதனக் கண்காட்சியும், கணினியறை திறப்புவிழாவும் இடம் பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப்பேரவைச் செயலாளர் அ.மு.அருணாசலம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

தீவக வலயத்திலுள்ள பாடசாலைகளில் நவோதயா பாடசாலையாகத் தெரிவுசெய்யப்பட்டு, செயற்பட்டு வருகின்ற ஒரு பாடசாலை நெடுந்தீவு மகாவித்தியாலயம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (113)

## மாதுமை மழலைகள் கல்விப் பூங்காவின் கல்விக் கண்காட்சி

சாவகச்சேரி

மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்காவின் கல்விக் கண்காட்சி நிகழ்வு - இன்று காலை 10 மணிக்கு பூங்கா இயக்குநர் சி.சிவகாந்தன் தலைமையில், பூங்காவின் தற்காலிக வகுப்பறையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜும், சிறப்பு விருந்தினர்களாக - தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் எஸ்.ஜெயராஜ், தென்மராட்சி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா, அரசியல் துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், முன்பள்ளி இணைப்பாளர் செல்வி அன்சலின் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக மின்சாரசபை தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

தொழிற்சங்கங்களின் உடன்பாடின்றி இலங்கை மின்சாரசபையை மறுசீரமைப்பு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கான அமைச்சரவைப் பத்திரம் - இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டால் இருந்தால், நாளை சகல தொழிற் சங்கங்களும் வேலை நிறத்தத்தில் ஈடுபடவுள்ளன.

இலங்கை மின்சாரசபையை மறுசீரமைப்பு செய்யும்போது பின்பற்ற வேண்டிய ஆலோசனைகள், மறுசீரமைப்பு செய்யும் குழுவுக்கு வழங்கியுள்ளதாகவும், இந்த ஆலோசனைகளுக்குக் கேடு விளைவிக்கும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படுமாக இருந்தால், அதற்கு எதிராகப் பரந்தளவில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக, இலங்கை மின்சார சபை தொழிற்சங்க கூட்டமைப்பின் அமைப்பாளர் ஆனந்த நிமலரட்ண தெரிவித்தார்.

இலங்கை மின்சாரசபை பல பிரிவுகளாகுவதற்கு எடுத்த தீர்மானத்தை, தொழிற்சங்கங்கள் கடுமையாக எதிர்ப்பதாகவும், இந்த எதிர்ப்பை குழுவுக்குத் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மின்சார சபையை கம்பணிகளாக உண்டாக்காமல், வர்த்தக அலகாக உண்டாக்கி அவற்றுக்கு அதிகாரத்தை வழங்கி, நிர்வாகத்தை நடத்திச் செல்வதற்கான தொழிற்சங்கங்களின் திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(தே)

வாரநோக்கு... - யாழவன் -

# நாலாம் கட்ட ஈழப்போர் ஆரம்பிப்பதற்கான அடித்தளமே போராளிகள் மீதான தாக்குதல்

**புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாதிடப்படும் வேளை, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அரசியல் பணிகளில் ஈடுபடும் போராளிகளின் பாதுகாப்புக்கு, அரசதரப்பே பொறுப்பு எனத்தெரிவிக்கப்பட்டது தெரிந்த விடயம்.**

**தற்போது அந்த விடயம் சர்ச்சைக்குள்ளாகி, விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்குத் தாம் பாதுகாப்பு வழங்க முடியாது என இராணுவத் தரப்பு மறுத்து வருகிறது. இவ்வாறு மறுத்து வரும் அதேவேளை - தமிழ் ஆயுதக் குழுக்கள், இராணுவப் புலனாய்வு அணிகள் என்பவற்றோடு இணைந்து, விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மீது தாக்குதல்களையும் தொடுத்து வருகிறது. இவ்வாறானதொரு தாக்குதலே திருகோணமலைத் தாக்குதல்.**

மீண்டும் ஒரு போரப் பீதி பொது மக்கள் மத்தியில் இன்று எழுந்துள்ளது. பொதுக்கட்டமைப்புடன் சற்றுத் தணிவானதொருநிலை தோன்றும் என எதிர்பார்த்திருந்த வேளையிலே, திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் அலுவலகம் மீது இனந் தெரியாத துப்பாக்கிதாரிகள் மேற்கொண்ட தாக்குதலில், பேராளிகள் சாவடைந்த சம்பவமா



னது மீண்டும் போர் ஆரம்பமாகலாம் எனும் அச்சநிலையைத் தோற்றியுள்ளது.

விடுதலைப்புலிகளின் அணியினர் பயணம் செய்த வாகனம் மீது, கிளைமோர்க் குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டதும், அதில் மயிரிழையில் நாற்பது போராளிகள் பிழைத்துக் கொண்டதுடன், அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலே முறுகல் நிலை தோன்றியுள்ளது. இந்தச் சம்பவத்தையடுத்து தமது போராளிகள் இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் பயணம் செய்யும் போது, அவர்களது பாதுகாப்பை இராணுவத்தினர் அதா வது - அரச தரப்பு உறுதி செய்ய வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் தமது போராளிகளின் பாதுகாப்பைத் தாமே உறுதி செய்வார்கள் எனவும் விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு போராளிகளின் பாதுகாப்புத் தொடர்பாக சர்ச்சை முடிவடைவதற்கு முன்னரேயே திருகோணமலையில் போராளிகள் தங்கியிருந்த முகாம் மீது துப்பாக்கி தாரிகள் தாக்குதலை மேற்கொண்டு, இரண்டு போராளிகள் உட்பட நால்வரைக் கொலை செய்துள்ளனர். அரசுதனக்கும், இந்தத் தாக்குதலுக்கும் எதுவித தொடர்பும் இல்லை. இது விடுதலைப்புலிகளின் உள் வீட்டுப் பிரச்சினையின் விளைவு எனக்கருத்து வெளியிட்டு, தனது தவறை மறைப்பதற்கு முனையலாம். ஆனால் அதனை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாதிடப்படும் வேளையிலே, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அரசியல் பணியில் ஈடுபடும் போராளிகளின் பாதுகாப்புக்கு, அரசதரப்பே பொறுப்பு எனத் தெரிவிக்கப்பட்டது தெரிந்த விடயமே.

தற்போது அந்த விடயமே சர்ச்சைக்குள்ளாகி, விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்குத் தாம் பாதுகாப்பு வழங்க முடியாது என இராணுவத் தரப்பு மறுத்து வருகிறது. இவ்வாறு மறுத்து வரும் அதேவேளை - தமிழ் ஆயுதக் குழுக்கள், இராணுவப் புலனாய்வு அணிகள் என்பவற்றோடு இணைந்து, விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் மீது தாக்குதல்களையும் தொடுத்து வருகிறது. இவ்வாறானதொரு தாக்குதலே திருகோணமலைத் தாக்குதல்.

அந்தத் தாக்குதலை நிகழ்த்தியவர்கள் தமிழிலே உரையாடியதாகவும், பத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்ததாகவும், தாக்குதலை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். இவர்கள் விடுதலைப்புலிகளின் அலுவலகத்தை நோக்கி வருகையிலே, இராணுவத் தடைமுகாமைத் தாண்டியே வந்துள்ளனர். துப்பாக்கி தாரிகளை இலகுவாக உள்நுழைய அனுமதித்தது இராணுவத்தினரின் செயலே என்பதை விளங்கிக் கொள்ளக் கூடியதொரு நிலையிலேயே தமக்கும், இந்தத் தாக்குதலுக்கும் தொடர்பு இல்லையென இராணுவத் தரப்பு மறுப்பது வேடிக்கையான விடயமாகும்.

தமதுகட்டுப்பாட்டுப்பிரதேசம் ஒன்றிலே, பட்டப் பகலிலே பதினைந்து பேர்கொண்ட ஆயுதக் குழுவொன்று துணிகரத்தாக்குதலை நிகழ்த்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது எனக் கதை விட்டு, தமது புலனாய்வுப் பிரிவு மற்றும் பொலிஸ், இராணுவத்தி னரின் திறமையைக் குறைத்துக் கொள்கிறது. அந்தத் தாக்குதலைத் தடுக்கக் கூடிய சூழ்நிலையிலோ அல்லது தாக்குதல் தாரிகளைக் கைது செய்யும்நிலையிலோதாம் இல்லையெனக் கூறுவது பரிதாபகரமான விடயம். இதனால் விளையும் அவமானத்தை விட, அந்தத் தாக்குதலுக்குத் தாமே முழுப் பொறுப்பு என ஒத்துக் கொள்வது மேலான விடயமாகும்.

இதுவரை காலமும் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதல்கள், தற்போது திருகோணமலை மாவட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளது. கிழக்கை மையமாக வைத்து நடைபெறும் தாக்குதல்கள் எதிர் காலத்திலே வட பகுதிக்குள்ளும் பரவ வாய்ப்புள்ளது. கிழக்கிலே தாக்குதல்களை மேற்கொண்டு விட்டு, அதனை இலகுவாக கருணா அணிமீது போடக்கூடியதாகவுள்ளது. இதைச் சாட்டாக வைத்துக் கொண்டு இராணுவம் தனது கைவரிசையைக் காட்டி வருகிறது. இது மீண்டுமொரு கட்ட ஈழப்போர் ஆரம்பிப்பதற்கான அடித்தளத்தை உருவாக்குவதற்கான சதிவேலைகளே ஆகும்.

**இதுவரை காலமும் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதல்கள், தற்போது திருகோணமலை மாவட் டத்தை நோக்கி நகர்ந்துள்ளது. கிழக்கை மையமாக வைத்து நடைபெறும் தாக்குதல்கள் எதிர் காலத்திலே வட பகுதிக்குள்ளும் பரவ வாய்ப்புள்ளது. கிழக்கிலே தாக்குதல்களை மேற் கொண்டு விட்டு, அதனை இலகுவாக கருணா அணிமீது போடக்கூடியதாகவுள்ளது. இதைச் சாட்டாக வைத்துக் கொண்டு இராணுவம் தனது கைவரி சையைக் காட்டி வருகிறது. இது மீண்டுமொரு கட்ட ஈழப்போர் ஆரம்பிப்பதற் கான அடித்தளத்தை உரு வாக்கு வதற்கான சதிவேலைகளே ஆகும்.**

மூன்றாம் கட்ட ஈழப் போர் கூட திருகோணமலையிலிருந்தே ஆரம்பமாகின. திருகோணமலைத் துறைமுகத்திலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரணசுறு, வீரயா, டோறாப் படகுகளைக் கரும்புலித் தாக்குதல் மூலமாகத் தகர்த்ததன் மூலம், மூன்றாம் கட்ட ஈழப்போரை புலிகள் ஆரம்பித்தனர். இன்று மறுதலையாக திருகோணமலையிலே அரச தரப்பு தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது. இதுவும் ஈழப்போருக்குக்கான வழியேயாகும்.

பொதுக்கட்டமைப்பு ஒன்றுக்குத் தயார் இல்லாத நிலையில் - தனது அரசு இருப்பதாகச் சர்வதேச சமூகம் எடை போட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே, அதற்குக் காரணமாகவிருந்த ஜே.வி.பியை அரசிலிருந்து தூக்கி எறிந்துவிட்டு, திடீரென பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை சந்திரிகா ஏற்படுத்தினார். இதன்மூலமாகச் சரிந்து கொண்டிருந்த தனது அரசின் நம்பகத் தன்மையை சர்வதேச சமூகத்தின் முன் தூக்கி நிறுத்தி விட்டார். ஆனால் மேற்கண்ட தாக்குதல்கள் தொடரும் பட்சத்தில், பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டமையால் எதுவிதமான, உருப்படியான பயன்களும் எட்டப் போவதில்லை என்பது யதார்த்தமாகும்.

எனவே பலத்த எதிர்ப்புகளுக்கும் மத்தியிலே கடும் பிரயத்தனப்பட்டு தாம் ஏற்படுத்திக் கொண்ட பொதுக் கட்டமைப்பானது - உண்மையிலே பயனானது தான் எனக் காட்டிக் கொள்ளும் விதத்திலாவது - ஏதாவது உருப்படியான வேலைகளை சந்திரிகா ஆரம்பிக்க வேண்டும். அதனை விடுத்து யுத்தநிறுத்த உடன்படிக்கையைக் கேள்விக்குள்ளாக்கி, விடுதலைப் புலிகளின் போராளிகள் மீது தாக்குதல்களை மேற்கொள்வது ஆபத்தான விளைவுகளையே தோற்றுவிக்கும்.



புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஆரம்பத்திலே அப்போது பதவியிலிருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு, தமிழ் ஆயுதக் குழுக்களிடம் இருந்த ஆயுதங்களைப் பறிமுதல் செய்து கொண்டது. இதுவும் கூட பேரளவிலான தொரு நடவடிக்கையாகவே இருந்தாலும் கூட, சர்வதேச மட்டத்திலே கவனத்தை ஈர்க்கும் செயலாக அமைந்தது. ஆனால் அந்த அரசு பதவி விலகி, தற்போதைய அரசு பதவிக்கு வந்தவுடனே இவ்வாறான பதுங்கித் தாக்குதல் மற்றும் புலனாய்வுத் தாக்குதல்கள் என்பன அதிகரிக்கத் தொடங்கின. இதற்கு கருணாவின் துரோகத்தனம் சாட்டாக அமைந்து கொண்டது.

இது மட்டுமன்றி, அவ்வப் போது தமிழ் - முஸ்லிம் மக்கள் இணைந்து வாழும் பகுதிகளிலும் தாக்குதல்களை மேற்கொண்டு, முஸ்லிம்இளைஞர்களைக் கொலை செய்து விட்டு, அந்தப் பழியை விடுதலைப் புலிகள் மீது திசை திருப்பி தமிழ் - முஸ்லிம் உறவிலே விரிசலை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளும் பெருமளவிலே நடைபெற்றன. இந்தநிலை அண்மைக்காலம் வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

மறுபக்கம் இராணுவப் புலனாய்வாளர்கள் மீதான தாக்குதல்களும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. அதிலே குறிப்பாகப் புலன்னாய்வுப் பிரிவைச் சேர்ந்த முக்கிய தளபதி முத்தலிப்பினுடைய கொலையைக் குறிப்பிட முடியும். தற்கொலையுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறி, சிங்களவர்கள் உட்பட சிலர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலிலே வைக்கப்பட்டுள்ளனர். அரசு தனது தரப்புக் கொலைக்கான சூத்திரதாரிகளைக் கண்டறிவதலேயே காட்டும் வேகத்தை, விடுதலைப் புலிகளின் தரப்பு கொலைகளிலே காட்டுவதேயில்லை.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறையின் முன்னாள் அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் படுகொலை தொடர்பான கொலைச் சூத்திரதாரிகள் தொடர்பாக இது வரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. சந்தேக நபர்கள் கூடக் கைது செய்யப்படவில்லை. இதுவும் அரச தரப்பு மீதான சந்தேகங்களை வலுப்படுத்துகிறது. இவற்றைக் களைய வேண்டியது அரசின் கட்டாய கடமைகளாகும்.

திருகோணமலைச் சம்பவத்தை அடுத்து, பல்வேறு மாவட்டங்களிலும் தங்கியிருந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் வன்னிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதனால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயுள்ள புலிகளின் அரசியல் அலுவலகங்களிலே போராளிகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இவ்வாறு போராளிகள் வன்னிக்கு அழைக்கப்பட்டமை இது இரண்டாவது தடவையாகும். முன்னர் கௌசல்யனின் படுகொலையை அடுத்து உடனடியாக அழைக்கப்பட்ட போராளிகளுக்கு வேண்டிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர். தற்போது அவ்வாறானதொரு சூழ்நிலை.

இவ்வாறு போராளிகள் வன்னிக்கு அழைக்கப்படுவார்களாக இருந்தால், அது மற்றுமொரு ஈழப் போருக்கான அறிகுறியாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறனதொரு நிலை தோன்றாமல் இருப்பதைத் தடுப்பது அரசினுடைய கைகளிலேயே உள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும், பேரளவிலேயே இதுவரை பல அறிக்கைகளைத் தயார் செய்துள்ளது. ஆனால் அவற்றுள்ளே எது தொடர்பாகவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேயில்லை. இதுவும் கூட கண்காணிப்புக்குழு தேவை யற்ற ஒன்று என்ற கருத்தை உருவாக்கி, மீண்டும் ஒரு போருக்குக் கொண்டு செல்லும் வழியாக அமையலாம். இவை அனைத்தையும் கவனத்தில் எடுத்து, அரசு செயற்படுமா?

# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 33, 35 இலக்க நிவாரண விநியோகம்!

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலக உணவுத்திட்டத்தால் வழங்கப்படும் நிவாரணத்தின 33 ஆம், 35 ஆம் புள்ளிகளுக்கான வழங்கற் கட்டளைகள் இன்றுமுதல் யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

ப.நோ.கூ. சங்கங்கள் - மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க செயலகத்தில் அவற்றை உடனடியாகப் பெற்று 18 ஆம் திகதிக்கு முன்னர் உலகஉணவுத்திட்ட நாவற்குழி உணவுக் களஞ்சியத்திலிருந்து உணவுப் பொருட்களைப் பெற்று உடனடியாக விநியோகத்தை ஆரம்பிக்குமாறும் 25 ஆம் திகதியுடன மேற்படி புள்ளிகளுக்குரிய உணவு விநியோகத்தை நிறுத்துமாறும் சுனாமியால் பாதிக்கப் பட்டவர்கள் மேற்படி புள்ளிகளுக்குரிய நிவாரணத்தை காலம் தாழ்த்தாது முடிவுறும் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும் யாழ்.மாவட்ட புனர் வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க செயலகத்தின் உதவிப் பணிப்பாளர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

# வட - கிழக்கு உதைபந்தாட்ட சம்மேளனம் நேற்று கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம்!

வடக்கு - கிழக்கு எட்டு மாவட்ட உதைபந்தாட்டச் சங்கங்களின் நிர்வாகத்தினர் கலந்துகொண்ட கலந்துரையாடல் நேற்றுக் காலை 10 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விளையாட்டுத்துறை அலுவலகத்தில் பொறுப்பாளர் பாப்பா தலைமையில் இடம்பெற்றது.

இதில் தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன், தலைவர் பத்மநாதன், செயலாளர் அன்ரன் அன்பழகன் உட்பட மாவட்ட விளையாட்டு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதில் 8 மாவட்ட உதைபந்தாட்டச் சங்கங்கள் இணைந்து வடக்கு - கிழக்கு உதைபந்தாட்டச் சம்மேளனம் அமைக்கப்பட்டது.

இதில் தலைவர் அன்ரன் தங்கேஸ்வரன் - மன்னார் லீக், உப தலைவர் குணரத்தினம், செயலாளர் கிளிபேட், உப செயலாளர் வரதராஜா - பருத்தித்துறை லீக், பொருளாளர் ஸ்கந்தகுமார்- வவுனியா லீக், நிர்வாக உறுப்பினர்களாக ஏ.எம்.இப்ராஹிம் - அம்பாறை லீக், எம்.எவ்.பாரூக் - மட்டக்களப்பு லீக், கே.யோகரட்ணம் - திருகோணமலை லீக், தி.தர்மசீலன் - முல்லைத்தீவு லீக், கே.புவனேந்திரராசா - கிளிநொச்சி லீக், என்.சாண் டஸ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

# இந்து மாமன்றத்தின் பொன்விழாவையொட்டி யாழ்ப்பாணத்தில் இரு நாட்கள் இந்து மாநாடு!

யாழ்ப்பாணம் —

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொன்விழாவையொட்டி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும், அகில இலங்கை இந்து மாமன்றமும் இணைந்து நடத்தும் இருநாள் இந்துமாநாடு நாளை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

அகில இலங்கை இந்துமா மன்றத்தின் தலைவர் வி.கயிலாசபிள்ளை தலைமையில் முதல்நாள் மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தொடக்க உரையையும் -

அருட்கவி விநாசித்தம்பி, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஸ், யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ், கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஆகியோர் வாழ்த்துரைகளையும் வழங்கவுள்ளனர்.

மாநாட்டின் நோக்கம் பற்றிய அறிமுக உரையை செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் நிகழ்த்த, மாநாட்டின் அறிமுக உரையை பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில் இந்து ஒளி என்ற சிறப்பிதழும் வெளியிடப்படவுள்ளது.

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் முதுநிலை தமிழ் பேராசிரியரும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் சிறப்புநிலை பேராசிரியருமான சோ.ந.கந்தசாமி - என்றும் நிலைக்கும் எம் சமயம் என்ற பொருளில் சிறப்புரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து செயலமர்வுகள் ஆரம்பமாகும்.

வழிபாடு, வாழ்வியல் வரலாறு, மெய்யியல் விஞ்ஞானம், கலை கல்வியியல் ஆகிய துணைத் தலைப்புக்களில் இரு நாட்களும் 10 அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

# கடைத்தொகுதியை மறைத்த வாசலை அகற்ற பள்ளிவாசல் நிர்வாகம் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம் —

யாழ்- மானிப்பாய் வீதியிலுள்ள பெரிய மொகதீன் ஜும்மா பள்ளிவாசல் கடைத்தொகுதியை மூடப்பட்டுள்ள வாசல்களை உடைப்பதற்காக நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் சென்ற பொலிஸாருக்கும் பள்ளிவாசல் நிர்வாகத்திற்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து பொலிஸார் தமது நடவடிக்கையை கைவிட்டுத் திரும்பினர்.

நேற்று நண்பகல் இடம்பெற்ற சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

மேற்படி பள்ளிவாசல் கடைத்தொகுதியை கடந்த 1997ஆம் ஆண்டு முதல் இன்று வரை தனிநபரொருவர் நடத்தி வருகிறார். முஸ்ஸிம் நபரான இவர்- மதத்திற்கு முரணான செயற்பாடுகளில் ஈடுபடுவதோடு பழைய இரும்புகள், தகரங்கள், ரயில் தண்டவாளங்கள் போன்றவற்றை பள்ளிவாசல் அமைந்திருக்கின்ற கட்டடத்தொகுதியில் வைத்து விற்பனை செய்து வருவதால் இந்த நடவடிக்கைகளுக்கு பள்ளிவாசலை பயன்படுத்த வேண்டாம் என குறித்த நபரிடம் பள்ளிவாசல் நிர்வாகம் கோரிக்கை விடுத்தது.

எனினும், அவர் அதனை பொருட்படுத்தாது செயற்பட்டுவந்தார். தற்போது பள்ளிவாசல் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் பழைய இரும்புகள் பள்ளிவாசலை விட்டு அகற்றப்பட்டதோடு தேவையற்றிருந்த வாசல்களையும் நிர்வாகம் மூடியதோடு குறித்த கடை நடத்திய நபரையும் வெளியேற்றியது.

இதனையடுத்து குறித்த நபர் பள்ளிவாசல் நிர்வாகம் தனது விற்பனை செயற்பாட்டுக்கு குந்தகம் விளைவித்ததாக நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்தார்.

இந்த முறைப்பாட்டை விசாரணை செய்த நீதிமன்றம் மூடப்பட்ட கடையின் வாசலை உடைக்கும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

இந்த உத்தரவையடுத்து கடை வாசலை உடைப்பதற்காகச் சென்ற பொலிஸார் நிர்வாகத்தினர் காட்டிய எதிர்ப்பால் தமது நடவடிக்கையை கைவிட்டுச் சென்றனர்.

## பாகிஸ்தானில் பயங்கரம்

# மூன்று ரயில்கள் மோதியதில் 120 ற்கும் மேற்பட்டோர் பலி!



இஸ்லாமாபாத் —

பாகிஸ்தானில் நேற்று அதி காலை மூன்று பயணிகள் ரயில்கள் மோதிக் கொண்டதில் 120 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இதுவரை 107 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. காயமடைந்த நூற்றுக்கணக்கானோர் மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கராச்சியில் இருந்து 600 கிலோமீற்றர் தொலைவில் - சிந்து மாகாணத்தில் அமைந்துள்ள சர்ஹாத் ரயில் நிலையத்தில் நேற்று அதிகாலை 4.30 மணிக்கு இந்தப் பயங்கர விபத்து இடம்பெற்றுள்ளது.

ராணுவத்தின் உதவியுடன் தீவிரமாக மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காயமடைந்தவர்களை மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்ல 6 ராணுவ ஹெலிகொப்ரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

விபத்துக் குறித்து பாகிஸ்தான் ரயில்வே தலைவர் ஷகீல் துரானி கூறியதாவது - சர்ஹாத் ரயில் நிலையத்தில் குயெட்டா எக்ஸ்பிரஸ் ரயில் நின்றுகொண்டிருந்தது. அப்போது லாகூரில் இருந்து வந்த கராச்சி எக்ஸ்பிரஸ் ரயில் மீது மோதியது. இதில் 13 ரயில் பெட்டிகள் தடம்புரண்டன.

தூக்கி வீசப்பட்ட சில பெட்டிகள் அடுத்த ரயில் பாதை தண்டவாளத்தில் போய் விழுந்தன. அதேநேரத்தில் - அந்தப் பாதையில் வந்த கராச்சி - ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ் ரயில் தண்டவாளத்தில் கிடந்த ரயில் பெட்டிகளின் மீது மோதியதில் அதுவும் தடம்புரண்டது எனத் தெரிவித்தார்.

இதுவரை 107 சடலங்கள் மீட்கப்பட்டதாகவும், தடம்புரண்ட ரயில் பெட்டிகளில் இன்னும் பலவற்றை உடைத்துத் திறந்து அவற்றில் சிக்கியுள்ள பயணிகளையும் இறந்தவர்களின் சடலங்களையும் மீட்க வேண்டியிருக்கிறது என்றும் பாகிஸ்தான் ரயில்வே பொது முகாமையாளர் அப்துல் பாவ் தெரிவித்தார்.



இறந்தவர்கள் எண்ணிக்கை 300 பேருக்கு மேல் இருக்கும் என பொலிஸ் அதிகாரிகளை மேற்கோள் காட்டி என்.என்.ஐ செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

விபத்துக் குறித்து பெரும் அதிர்ச்சி தெரிவித்த பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் உயர்நிலை விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

சர்ஹாத் ரயில் நிலையத்தில் சிக்னலை கராச்சி எக்ஸ்பிரஸ் ரயிலின் சாரதி சரியாக கவனிக்காமல் போனது தான் இந்த விபத்துக்குக் காரணமென ரயில்வே அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.


FREE SEMINAR IN JAFFNA
Today (14 th) at: 10.00am




SPOT ADMISSION
BY: JUGAL LALSODAGAR HEAD OF INTERNATIONAL OFFICE
ST.PATRICK'S COLLEGE - UK
TO BOOK YOUR APPOINTMENTS CALL 0777 - 209446
PLEASE BRING YOUR EDUCATIONAL CERTIFICATES
SEMINAR WILL BE HELD AT INSTITUTE OF INFORMATICS STUDIES
100,Clock Tower Road, Jaffna. Tel: 021 222 2831
41 STUDENTS HAVE OBTAINED THE VISA WITHIN LAST 6 MONTHS
APPLY WITH O/L
(PART TIME WORK CAN BE ARRANGED)
Instant Admissions will be offered for eligible students.
Sept 2005 Intake
•BSC •MSC •MBA •PhD
KMS Knowledge management Systems
Leading Educational Consultants and Training Providers
6 - 1st floor 37th Lane, Wellawatte, Colombo 6. Tel: 2361565



WTRFM.com
இடம் : வீரசிங்கம் மண்டபம் காலம் : இன்றும் நாளையும்
வறிய மாணவர்களின் கல்வி நிதிக்காக




ரிக்கெட் கிடைக்கும் இடங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்பாடி றெசிடன்ஸி<br>51C, அம்மன் கோவில் வீதி, நல்லூர் | E.S.பேரம்பலம் சக நிறுவனம்<br>50, 52, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | Super Show<br>டிஜிற்றல் கலர் லாப்,<br>கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | C.D.சிற்றி<br>205/5 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | யாழ்ப்பாண மின்னகம்<br>மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். |

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

### அம்பேபிட்டிய கொலையாளிகள்

# மரணதண்டனை தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு!

கொழும்பு —

மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலைவழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து பேரும் மேற்படி தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றில் மேன்முறையீடு செய்துள்ளனர்.

தமக்கு தண்டனை வழங்கப்பட்ட முறையானது சட்டத்திற்கு முரணானது எனக்குறிப்பிட்டே குற்றவாளிகள் இந்த மேன்முறையீட்டைச் செய்துள்ளனர். மரணதன்டனை விதிக்கப்பட்ட ஐந்து பேரும் வெலிக்கடைச் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஊடாக தமது மேன்முறையீடு மனுக்களை உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்ததாகத் தெரியவருகிறது.

# பொலிஸ் காவலரண் வவுனியாவில் அழிப்பு!

வவுனியா —

வவுனியா - பூந்தோட்டம் கல்வியியற் கல்லூரிக்கு முன்பாக பொலிஸாரால் அமைக்கப்பட்டிருந்த காவலரண் இனந் தெரியாதோரால் அழிக்கப்பட்டது.

நீண்ட நாட்களாக பொலிஸார் கடமையில் இல்லாதிருந்த இந்தக் காவலரண் நேற்று முன்தினம் இரவு இனந் தெரியாதோரால் அழிக்கப்பட்டது.

இந்தக் காவலரண் முன்னர் அமைக்கப்பட்டபோதே பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இந்த வீதியில் முன்னரும் ஒரு காவலரண் தாக்கி அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## லெப்.சீலனின் 22 வது நினைவு நாள்!

விடுதலைப் புலிகளின் முதல் தாக்குதல் தளபதியான லெப். சீலனின் 22 ஆவது ஆண்டு நினைவு நாள் நாளை இயக்கச் சியில் நடைபெறவுள்ளது.

இயக்கச்சிப் பாடசாலையில் நாளை பிற்பகல் 5.15 மணியளவில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி மேற்கொண்டுள்ளது.

## வல்லை விபத்தில் மூவர் படுகாயம்!

வல்லைச்சந்தி இராணுவ முகாமுக்கு அண்மையில் நேற்று மாலை இரண்டு மோட்டார் சைக்கிள்களும் , ஒரு சைக்கிளும் மோதிக்கொண்டதில் மூவர் படு காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் வல்லைச்சந்தி இரா ணுவ முகாமுக்கும் முனியப்பர் கோயிலுக்கும் இடையிலுள்ள மதகிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களும் ஒரு சைக்கிளுமே ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தில் - ஒளி நிலா (வயது 27) மரியாம் பிள்ளை கனகம்மா (வயது 69-கோப்பாய்) வேதநாயகம் (வயது 55 - மாதகல்) ஆகிய மூவரும் படுகாயமடைந்தனர்.

இவர்கள் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர். (14)

# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி பட்டதாரிகள் நாளை ஆர்ப்பாட்டம்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் அரச சேவைகளில் இணைத்துக் கொண்ட 42 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளினதும் நியமனத்தை நிரந்தரமாக்குமாறு கோரி, அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நாளை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக பட்டதாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

நாளை நண்பகல் 12 மணிக்கு நடத்தவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் நிரந்தர நியமனத்தை உடன் வழங்குமாறும், இந்த நியமனங்களில் அரசியல் தலையீடுகளைத் தவிர்க்குமாறும் கோரிக்கைகள் முன்வைக்கப் படவுள்ளன.

இந்த 42 000 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதாகத் தெரிவித்த அரசாங்கம், இதுவரை அதனைச் செயற்படுத்தவில்லையெனவும், எனவே, நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை தொடர்ச்சியான ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தவுள்ளதாக பட்டதாரிகள் சங்கத் தலைவர் சந்தன சூரிய ஆராய்ச்சி தெரிவித்தார். (தே)

## ஆயுதக்குழுவின்...

வவுனியாவில் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளதுடன், வாகனங்களில் பயணம் செய்வோரில் சந்தேகத்திற்கிடமானவர்களை சோதனையிட்டும் வருகின்றனர்.

வவுனியாவில் - கோவிற்குளம், சின்னக்குளம், குருமன்காடு ஆகிய பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவினர் நடமாடுவதாக படையினருக்கு தகவல் கிடைத்திருந்தாலும், இதுவரை படையினரால் நடத்தப்பட்ட சோதனையில் பிஸ்ரல் குழுவைச் சேர்ந்த எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் படை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. (தே)

## தமிழ் இளைஞர்...

மதிப்பத்திரம் ஒன்றும் கண்டெடுக்கப் பட்டன.

கொழும்பு - கிராண்ட்பாஸைச் சேர்ந்த கிருஷ்ணன் ரவிச்சந்திரன் (வயது 23) என தேசிய அடையாள அட்டையில் குறிக்கப்பட்டுள்ளபோதும், சாரதி அனுமதிப்பத்திரத்தில் முஹமட் நசீர் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். இவரது கொலைக்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை.

# வெவ்வேறு தாக்குதல்களில்...

தனர்.

திருகோணமலை - கண்டிவீதியில் - நகரிலிருந்து 3 கிலோமீற்றர் தொலைவிலுள்ள காந்திநகரில் - அண்மைக்காலமாக கடும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் - நேற்று முன்தினம் காவலரண் ஒன்றை அமைத்தனர்.

இந்தக் காவலரண் மீதே நேற்றுக் காலை கைக்குண்டு வீசப்பட்டது. இதில் இரு சிப்பாய்கள் படுகாய மடைந்தனர்.

காயமடைந்த படையினர் திருமலை பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச்செல்லப்பட்டனர்.

கைக்குண்டுத் தாக்குதலை அடுத்து அந்தப் பகுதியில் பெருமளவான படையினர் குவிக்கப்பட்டனர்.

இதேவேளை -

மூதூர் - பாலத்தோப்பூரில் படையினருக்கான உணவு விநியோகத்தில் ஈடுபட்டிருந்த உழவு இயந்திரம் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவரும் ஒன்பது சிப்பாய்களும் காயமடைந்தனர்.

நேற்றிரவு 8.30 மணியளவில் மூதூர் - பாலத்தோப்பூர் பன்சல்வத்த வீதியில் அமைந்துள்ள இராணுவக் காவலரண்களுக்கு உணவு விநியோகத்தில் ஈடுபட்டிருந்த உழவு இயந்திரம் மீதே மறைந்திருந்து கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் அதில் பயணம் செய்த இராணுவ அதிகாரி ஒருவரும் ஒன்பது சிப்பாய்களும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து கடற்படை படகு மூலம் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டனர்.

இவர்களில் நான்கு பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - திருகோணமலை - சீனன்குடா விமானப்படை தளத்திலிருந்து நேற்றிரவு 10.45 மணியளவில் ஹெலிகொப்டர்கள் வழமைக்கு மாறான முறையில் பறப்புகளை மேற்கொண்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

திருகோணமலையில் நேற்று முன்தினம் முதல் இடம்பெற்ற பல்வேறு தாக்குதல்களில் 18 படையினர் படுகாயமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (04-10)

# தீர்ப்பதற்கான கட்டமைப்பை...

தரப்பில் மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், மட்டக்களப்பு நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன் ஆகியோரும், முஸ்லிம்கள் தரப்பில் மட்டக்களப்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளன பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பு சுமார் 3 மணி நேரம் நீடித்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி மற்றும் விவசாயம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து எற்கனவே ஆராயப்பட்ட சந்திப்பின் தொடர்ச்சியாக இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் சில விடயங்களை செயற்படுத்துவது தொடர்பாக ஏற்பட்டுள்ள நடைமுறைச் சிக்கல்கள் குறித்தும் ஆராயப்பட்டன.

தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைக்கும் வகையில் சில தீய சக்திகள் செயற்பட்டு வருவதால், இதனைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் பற்றி சந்திப்பில் இரு தரப்பினரும் வலியுறுத்தினர்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டம் 3 வலயங்களாக வகுக்கப்பட்டு, வலய ரீதியாக கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட இந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இதில் தமிழீழ விடுதலைப் புலிகளும், முஸ்லிம் பிரதிநிதிகளும் இடம்பெறுவர். இந்த கட்டமைப்பு ஒவ்வொரு வாரமும் கூடிப் பிரச்சினைகளுக்கு சுமூகமான முறையில் உடனுக்குடன் தீர்வைக் காணும்.

இந்தச் சந்திப்பு குறித்து விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரயன் செய்தியாளர்களிடம் கூறியதாவது -

உத்தேச - தமிழ் - முஸ்லிம் புரிந்துணர்வு கட்டமைப்பு மூலம் இந்த மாவட்டத்தில் இரு சமூகங்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு இலகுவானதும், விரைவானதுமான தீர்வைக் காணக் கூடியதாக இருக்கும்.

பொதுக்கட்டமைப்புக்கு விடுதலைப் புலிகள் விரைவில் பிரதிநிதிகளை நியமித்து, அதனை செயற்படுத்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக முஸ்லிம்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. முஸ்லிம்களை நசுக்கிவிட்டு நாம் எந்த தீர்வையும் எடுக்க மாட்டோம். மிக விரைவில் எமது அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் முஸ்லிம் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசுவார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை கட்டியெழுப்புவதற்காகவே பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த நிலையில் இதில் முஸ்லிம்களுக்கான பங்கினை அவர்களுடன் பேசித் தீர்க்க நாம் ஆயத்தமாக இருக்கின்றோம் என்றார் அவர்.

செய்தியாளர்களிடம் பேசிய முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகளில் ஒருவரான அல்ஹாஜ் வை.எல்.எம்.காதர் -

ஏற்கனவே நடந்த சந்திப்புக்களின் தொடர்ச்சியாகவே நீண்டகால இடைவெளியின் பின்பு இந்தச் சந்திப்பு நடந்தது.

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக இரு தரப்பினரும் எதுவிதமான கருத்துக்களையும் இந்தச் சந்திப்பின் போது முன்வைக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு அரசியல் பணி போராளி...

கொள்கை ரீதியாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. உண்மையிலேயே அரசாங்கமும், அரச படையினரும் யுத்தநிறுத்த உடன்பாட்டை மதித்து நடப்பதாக இல்லை. இதனால் அரசியல் பணி செய்வதில் பல சிரமங்கள் இருக்கின்றன.

தத்தினூடோ அரசியற்துறை போராளிகள் மேல் தாக்குதல் நடத்தப்படுவதை தவிர்க்கும் விதத்தில், அவர்களால் எங்களை இலக்குவைக்காதபடி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்து அரசியல் பணிகளில் ஈடுபடவுள்ளோம்.

நிலையில் இந்த மாதிரியான முடிவை எடுப்பது கிழக்கு மாகாணத்தில் சிக்கலை ஏற்படுத்தாதா?

பதில்:- சுனாமிக் கட்டமைப்புக்கும், எமது இந்தக் கட்டுப்பாட்டுக்கும் எந்தவிதமான தொடர்புகளும் கிடையாது. ஏனென்றால், எங்களைப் பாது

# அரசியலமைப்புக்கு விரோத...

குலைக்கும் வகையில் சில தீய சக்திகள் செயற்பட்டு வருவதால், இதனைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் பற்றி சந்திப்பில் இரு தரப்பினரும் வலியுறுத்தினர்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டம் 3 வலயங்களாக வகுக்கப்பட்டு, வலய ரீதியாக கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட இந்தக் கூட்டத்தில் முடிவுடுத்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக முஸ்லிம்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. முஸ்லிம்களை நசுக்கிவிட்டு நாம் எந்த தீர்வையும் எடுக்கமாட்டோம். மிக விரைவில் எமது அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் முஸ்லிம் பிரதிநிதிகளை

# அரசியலமைப்புக்கு விரோத...

எனவே உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி இந்த நடைமுறைக்கு மாறான வகையில் தமது கருத்தை கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை செய்துகொண்டாலும், நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்தின் அடிப்படையில் அந்த ஒப்பந்தம் செல்லு படியற்றதாகியுள்ளது.

பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதற்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள சட்டமூலம், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நிதிபோய் சேர்வதை தடுக்கும் வலுவைக் கொண்டுள்ளது.

இதேவேளை பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவதன் மூலம் விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கையை கட்டுப்படுத்த முடியும் என அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும் தெரிவித்து வந்தனர். எனினும் தற்சமயம் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையிலேயே விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி நாட்டின் சட்டங்களை மீறி செயற்பட்டு வருகிறது. ஜனாதிபதி தேர்தலை வலியுறுத்தி அது பேரணியை நடத்தியமை சட்டத்தை மீறும் செயலாகும்.

தேர்தல் ஆணையாளரே தேர்தல் ஒன்றை அழைக்கும் உரிமையைக் கொண்டுள்ளார்.

ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து விலகினாலும் அதனை பொருட்படுத்தாமல் ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டார்.

ரணில் விக்கிரமசிங்க தமது அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சிக்க மாட்டார் என்ற உறுதி மொழியை வெளிநாட்டு தூதரகங்களின் ஊடாக பெற்றுக்கொண்டதன் பின்னரே ஜனாதிபதி குறித்த ஒப்பந்தத்தை மேற்கொள்ளத் துணிந்தார்.

மத்தியில் சிறுபான்மை அரசாங்கமானாலும், மாகாணசபைகளில் சிறுபான்மையானாலும் ரணில் விக்கிரமசிங்கவின் உறுதிமொழியின் அடிப்படையிலேயே ஜனாதிபதி பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தி அதனை தற்சமயம்நடைமுறைப்படுத்தவும் முயற்சிக்கிறார்.

அரசியல் அமைப்பின் படி தேர்தல் நடத்தப்படும் காலத்தில் தேர்தல் ஆணையாளர் தேர்தலை நடத்துவார்.

இதனை சொக்ஸி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஏற்கனவே தெரிவித்திருப்பார்.

இந்த நிலையில் 2006ஆம் ஆண்டுதான் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பாராக இருந்தால் - ரணில் விக்கிரமசிங்கவினால் அரசாங்கம் கவிழ்ந்து விடாமல் மலர் தூவிக்கொண்டிருக்க மாத்திரமே முடியும் என்று விமல் வீரவன்ச தெரிவித்தார்.

# கிழக்கு அரசியல் பணி போராளி...

கொள்கை ரீதியாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. உண்மையிலேயே அரசாங்கமும், அரச படையினரும் யுத்தநிறுத்த உடன்பாட்டை மதித்து நடப்பதாக இல்லை. இதனால் அரசியல் பணி செய்வதில் பல சிரமங்கள் இருக்கின்றன.

எனவே, இந்தச் சிரமங்களைக் கருத்திற்கொண்டு வேறு மாற்று ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமே தவிர, கொள்கை ரீதியாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

கேள்வி:- மாற்று ஏற்பாடுகள் என்றால் என்ன? உங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து பணியாற்றுவது என்ற முடிவா?

பதில்:- அப்படியல்ல. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இப்போதும் எங்கள் அரசியற்துறை போராளிகள் வேலைசெய்துகொண்டு இருக்கிறார்கள்.

ஆனால், அரச படைகளின் உதவியுடனோ அல்லது அவர்களது அனுமதியுடனோ அல்லது ஆசீர்வாதத்தினூடோ அரசியற்துறை போராளிகள் மேல் தாக்குதல் நடத்தப்படுவதை தவிர்க்கும் விதத்தில், அவர்களால் எங்களை இலக்குவைக்காதபடி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்து அரசியல் பணிகளில் ஈடுபடவுள்ளோம்.

கேள்வி:- கடந்த வாரம் திருகோணமலையில் நடைபெற்ற தாக்குதலையடுத்து இந்த முடிவை எடுக்கிறீர்களா? அல்லது மட்டக்களப்பில் உள்ள நிலைமைகளை வைத்து இந்த நடைமுறையை எடுத்தீர்களா?

பதில்:- அண்மைக் காலமாகஅரச படையினர் கடைப்பிடித்துவருகின்ற போக்கு, எமது அரசியற்துறைப் பொறுப்பாளர் கண்காணிப்புக் குழு ஊடாக அனுப்பிய கடிதத்துக்கு அவர்கள் கொடுத்தனுப்பிய பதிலில் இருக்கின்ற பொறுப்புணர்ச்சியற்ற தன்மை போன்றவை எங்களை இந்த வகையில் சிந்திக்க வைக்கின்றன.

கேள்வி:- சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்பு அமையவுள்ள நிலையில் இந்த மாதிரியான முடிவை எடுப்பது கிழக்கு மாகாணத்தில் சிக்கலை ஏற்படுத்தாதா?

பதில்:- சுனாமிக் கட்டமைப்புக்கும், எமது இந்தக் கட்டுப்பாட்டுக்கும் எந்தவிதமான தொடர்புகளும் கிடையாது. ஏனென்றால், எங்களைப் பாதுகாப்பதற்காக நாங்கள் சில ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். எங்களைத் தாக்குதல் இலக்காக்கிக்கொள்ளாதபடி ஏற்பாடுகளைச் செய்துள்ளோமே தவிர, எங்களுடைய பழைய நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை.

கேள்வி:- இலக்காக்கி கொள்ளாதபடி என்றால் தற்பாதுகாப்புக்கு ஆயுதங்களுடன் இருப்பது என்ற பொருளா?

பதில்:- எங்களை இலகுவில் தாக்கமுடியாதபடி - எதிரிகளுக்கு எங்களை இலக்காக்கி கொள்ளாதபடி சில நகர்வுகளை, தங்குமிடம் சார்ந்த விடயங்களை அமைத்துக்கொள்வது என்று பொருள் என அவர் மேலும் தெரிவித்தார்.

MOBILE NET MCS COMPUTER SERVICES
Hardware Workshop
கணனிப் பராமரிப்பும் திருத்தியமைத்தலும்
PC Maintenance & Trouble Shooting
4 Days
3Hours Per Day
யூலை மாதம் 16,17,23,24ஆம் திகதிகளில், கட்டணம் 700/=
14 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்
திறமையான மாணவர்களுக்கு MCSE கற்கைநெறிக்கான புலமைப்பரிசில்
விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் நேரில், MCS, 324 Palaly Road, Jaffna. ,பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.07.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.